Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு
தினப்பதிப்பு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2809)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 22 புதன்கிழமை (05.06.2013) பக்கங்கள் 20 ஓசை – 248

தட்டுப்பாடு இல்லை (06)


எதிர்பார்ப்பு! (10)


பிரபலம்! (11)


உங்கள் பலன் ரிஷபம் (13)


தற்கொலை (17)

# நல்லிணக்க அணுகு முறையில் உரிமைகளைப் பெறுவதே வழி

## இதுவே இன்றைய யதார்த்தம்



(கொழும்பு)

இன்றைய நிலையில் இலங்கையில் உள்ள மக்களால் தெரிவுசெய்யப்பட்டுள்ள அதிகாரபூர்வ ஆளும் தரப்பின ருடன் நல்லிணக்க அணுகுமுறையூடாக கலந்துரை யாடல்களை நடத்தி தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கலாம் என்றும் தமி ழர் தரப்பினரின் வாய்ப்புக்கள் அனைத்தும் கைநழுவிப்போகா நிலையில் இந்த அணுகு முறையே இப்போதைக்கு உள்ள பெறு மதி மிக்க சிறந்த தெரிவாகும் என்று இலங்கைக்கான நோர்வேயின் முன் னாள் சமாதானத்தூதுவர் எரிக் சொல் ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினை தீர் வில் மத்தியஸ்த நிலைப்பாடு முடிவடைந்து பல வருடங்கள் கழிந்தபோதும் இலங்கை தொடர்பில் தொடர்ந்தும்

(19) ஆம் பக்கம் பார்க்க

## நாடாளுமன்றில் நேற்று கூச்சல்

நாடாளுமன்றத்தில் நேற்று சம்பிரதாயத்திற்கு மாறாக பிரே ரணை ஒன்று முன்வைக்கப் பட்டதால் ஏற்பட்ட கூச்சல், குழ ப்பத்தை அடுத்து நாடாளுமன் றம் ஒத்திவைக்கப்பட வேண் டிய நிலை ஏற்பட்டது. நேற்றுப் பிற்பகல் 1.00 மணிக்கு கூடி மாலை 6.00 மணிக்கு நிறைவ டையவிருந்த நாடாளுமன்ற அமர்வு மாலை நான்கு மணியு டனேயே நிறைவுக்கு வந்துள் ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## கழுத்தை இறுக்கியது ஊஞ்சல் கயிறு துடிதுடித்து சிறுமி மரணம்

ஊஞ்சலில் விளையாடிக் கொண்டிருந்த போது அதன் கயிறு இறுகி சிறுமியொருவர் பலியான சம்பவமொன்று உரும்பிராய் மேற்கு அன்னங்கை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தினைச் சேர்ந்த 14 வயதான காந்தன் உசாளினி என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார்.

ஊஞ்சலில் விளையாடிக்

(19) ஆம் பக்கம் பார்க்க

## அபிவிருத்தியை நோக்கி இலங்கை; சர்வதேச நாணய நிதியம் நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கையின் துறைமுகங் கள், விமான நிலையங்கள் மற் றும் உள்நாட்டு போக்குவரத்து சேவைகளை அதிகரிப்பதன் மூலம் உலகளாவிய வர்த்தக நடவடிக்கைகளில் இலங்கை முன்னேற்றம் காண முடியும் என்று சர்வதேச நாணய நிதி யம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்மூலம், ஏற்றுமதி நட வடிக்கைகளில் குறித்த அளவு மேம்பாடுகாண முடியும் எனவும் இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதி கோஷி மாதாய் தெரி வித்துள்ளார்.

உலகளாவிய வர்த்தகம் 2008 ஆம் ஆண்டில் 20 சத வீதமாக இருந்தபோதிலும், அதன் தன்மை 2010 ஆம் ஆண் டளவில் படிப்படியாக 10 சத வீத வளர்ச்சியினை எட்டியுள் ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் இந்தப் பிராந்தியத்தில் அபிவிருத்தி அடைந்த நாடாக மாறுவதற் கான நடவடிக்கைகளுக்கு முக் கியத்துவம் கொடுத்துவருவ தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தவர்களை வாக்காளராகப் பதிவது சட்டவிரோதமா?

### உயர்நீதிமன்றம் சபாநாயகருக்கு வியாக்கியானம்

(கொழும்பு)


யுத்த காலத்தில் வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக் களை மீண்டும் அவர்களது சொந்த இடத்தில் வாக்காளரா கப் பதிவது அரசியலமைப் புக்கு விரோதமானதா இல் லையா என்பது குறித்து உயர் நீதிமன்றம் சபாநாயகருக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

வடக்கில் இடம்பெயர்ந்த மக்களை மீண்டும் பதிவு செய்து, அவர்களுக்கு வாக்கு ரிமை வழங்குவது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த விசேட சட்டமூலம், அரசியல் அமைப்பிற்கு ஏற்றதா? இல் லையா? என்பது தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு சபா நாயகருக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவினால் குறித்த சட்ட மூலம் தொடர்பான நீதிமன்றத் தின் நிலைப்பாடு குறித்த அறிய கடந்த தினத்தில் உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அது பிர தம நீதியரசர் உள்ளிட்ட மூவ ரடங்கிய நீதிபதிகள் குழு இதனை விசாரணை செய்தது. இதனை தொடர்ந்தே நீதிமன்றத் தின் நிலைப்பாடு சபாநாய கருக்கு அனுப்பிவைக்கப்பட் டுள்ளது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி நிறை வடைந்த யுத்தத்திற்கு முன்னர் இவர்கள் இடம்பெயர்ந்ததாக, ஜனாதிபதி தாக்கல் செய்திரு ந்த மனுவில் குறிப்பிடப்பட்டி ருந்தது.

## தீர்வையற்ற வர்த்தகம் சீனாவுடன் கொழும்பு இணக்கம்



(கொழும்பு)

தீர்வைகள் எதுவும் அற்ற திறந்த சந்தையை உருவாக்கிக் கொள்ளும் முயற்சிகளில் சீனாவும், இலங்கையும் இறங்கி யுள்ளன.

இதற்கான இருதரப்பு பேச் சுக்கள் மற்றும் அது தொடர் பான நடவடிக்கைகள் தொடர் ந்து நடைபெற்று வருவதாக வெளிவிவகார அமைச்சர் ஜி. எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே, முன்மொழியப் பட்டுள்ள இருதரப்பு சுதந்திர வர்த்தக உடன்பாட்டுக்கு அமைய, இலங்கையின் உற் பத்திகளை தீர்வையின்றி சீன சந்தைக்கு ஏற்றுமதி செய்வ தற்கு, சீனாவிடம் அனுமதி யைப் பெறும் முயற்சியில் அர சாங்கம் ஈடுபட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். தேயிலை, இரத்தினக்கற்கள், ஆபரணங்கள், வாசனைப் பொருட்கள் போன்ற உற்பத் திகளுக்கே தீர்வையின்றி சீன சந்தையைத் திறந்து விடுமாறு

(19) ஆம் பக்கம் பார்க்க

## பூநகரியில் வீடமைப்பு உதவி; 365 குடும்பங்களுக்கு வாய்ப்பு

### சுவிஸ் அபிவிருத்தி நிறுவனம் அனுசரணை

(முழங்காவில்)

பூநகரி பிரதேசத்தின் நல லூர் கிராம அலுவலர் பிரிவில் 365 பயனாளிகளுக்கு சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தால் வீடமைப்புத் திட்டம் வழங்கப் பட்டுள்ளது.

5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் அமைக்கக் கூடியவகையில் இப்பயனாளிக ளுக்கு வீடமைப்புத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பயனாளிகளும் வீடமைப்பு வேலைகளை உட னடியாக ஆரம்பிக்கக்கூடிய

(19) ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையர்கள் சீனாவின் அடிமைகளா?



(கொழும்பு)

இலங்கையில் சகல மக்களும் சீனாவின் அடிமைகளாகும் நிலை தோன்றியுள்ளதாக ஐக்கிய தேசியக கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது. கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டார்.

சீனா இலங்கைக்கு நிபந்தனையின் அடிப்படையிலேயே கடனு தவிகளை வழங்குகின்றது. நுரைச்சோலை அனல்மின் நிலைய கட்டுமான பணிகளை நிறைவு செய்துகொள்ள முடியாத அரசாங் கம், சீன வங்கியிடம் உதவி கோரியது.

அந்தக் கடனை திரும்பிச் செலுத்த காலதாமதமானதால் நுரைச் சோலை திட்டத்தை தமது கட்டுப்பாட்டுக்கு கீழ் கொண்டுவர யோசனை கூறியுள்ளது.

இவ்வாறு அனைத்து தேவைகளுக்கும் நிபந்தனையின் கீழ் அரசாங்கம் சீனாவிடம் செல்கிறது. இதனால் இலங்கைக் குடிமக்கள் அனைவரும் சீனாவின் அடிமைகளாகும் அபாயம் தோன்றியுள்ளது.

உள்ளே...
தரம் ஐந்து புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்

## பெண் லிகிதர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(வலிகாமம்)

வலி.தென்மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் பெண் லிகிதர் பதவிக்கு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இப்பதவிக்கு க.பொ.த. சாதாரணதர, கூட்டுறவு பயிற்சிக் கல்லூரிச் சான்றிதழ் ஆகியன சமர்பிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 10 ஆம் திகதியாகையால் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை வலி.தென்மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், 7 ஆம் கட்டை, சண்டிலிப்பாய். என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். விபரங்களை மேலதிகமாக பெற்றுக்கொள்ள 021 320 1113 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும். (114)

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 961

திகதி 03.06.2013

வெற்றி எண்கள்: 21 25 35 38 — ஆங்கில எழுத்து: Z

ஜக்பொட் பரிசு ரூ. 13,219,060/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 13,219,060/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 2 | 10,00,000/= | ரூ. 20,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8 | 50,000/= | ரூ. 400,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 262 | 1,000/= | ரூ. 262,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 433 | 1,000/= | ரூ. 433,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11447 | 60/= | ரூ. 686,820/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5975 | 40/= | ரூ. 239,000/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 150383 | 20/= | ரூ. 3,007,660/= |
| ஆங்கில எழுத்து | 21621 | 20/= | ரூ. 432,420/= |
| | | மொத்தம் ரூ. | 7,460,900/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 விதம் பணப்பரிசுகளை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| குருநாகல் | 604241336-3-33 |
| கேகாலை | 604252089-9-39 |
| கண்டி | 604244015-3-13 |
| மட்டக்களப்பு | 604256350-6-26 |
| கொழும்பு | 604245467-0-30 |
| கம்பஹா | 604255008-9-19 |
| யாழ்ப்பாணம் | 604250638-6-06 |
| மாத்தறை | 604242924-4-34 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,860,900/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 13,513,120/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2013.06.06 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/2806)

## கிளி.மாவட்ட இளைஞர் தினம்

(முழங்காவில்)

வருடாவருடம் கொண்டாடப்படும் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் தினம் 8 ஆம் திகதி காலை 9 மணிக்கு பூநகரி 4 ஆம் கட்டையிலுள்ள ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டுமைதானத்தில் பூநகரி பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தின் 4 பிரதேச செயலர் பிரிவினைச் சேர்ந்த இளைஞர் பிரிவைச்சேர்ந்த இளைஞர்கள் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

விழாவில் விருந்தினரர்களாக 661, 662 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த இராணுவ உயர் அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

சிறந்த இளைஞர்களுக்கான விருது வழங்கல் அத்துடன் இளைஞர் கழகங்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக இளைஞர் சேவை மன்ற அதிகாரி தெரிவித்துள்ளார். (112)

## பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரயர் சேவை வகுப்பு 3 தரம் - 1 இற்கு தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கான நியமனக்கடிதம் வழங்கும் வைபவம் இடம்பெறவுள்ளது.

வடக்கு மகாணப் பொதுச்சேவைக்கு நியமிக்கும் பரீட்சை மற்றும் வடமாகாண கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட நேர் முகத்தேர்வு என்பவற்றின் அடிப்படையில் இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு தமிழ் மொழி மூலமான ஆசிரியர்கள் 200 பேர் ஆசிரியர் நியமனத்திற்கு தகைமை பெற்றுள்ளனர்.

யாழ்ப்பணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்வரும் 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரியிலும் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு 08 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்திலும் நியமனக்கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கான அழைப்புக்கடிதம் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. தெரிவுசெய்யப்பட்டவர்களது பெயர்ப்பட்டியலை வடமாகாணக் கல்வி அமைச்சின் விளம்பரப்பலகையில் பார்வையிடலாம் என வடமாகா்ண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

## ஆன்மீக நிகழ்வு


நபிகள் நாயகத்தின் ஆன்மீக பயணத்தின் நிறைவு தொழுகை இன்று முஸ்லிம் பள்ளிவாசல்களில் நடைபெறும் என சிவலைபள்ளி பேஷ் இமாம ஏ.எம்.ஏ அஸீஸ் மௌலவி அறிவித்துள்ளார்.

## உள்ளி விலை சரிவு

யாழ்.குடாநாட்டில் 300 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட உள்ளி விலை தற்போது விலை சரிவடைந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடிகாமம் சந்தையில் மரக்கறி விற்பனையாளர்கள் 1 கிலோ உள்ளி 150 ரூபாவிற்கு விற்பனை செய்ததைக் காணமுடிகின்றது. (150)



# நான்கு இந்து ஆலயங்களில் திருட்டு; ஜனாதிபதிக்கான மகஜர் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரே இரவில் 4 இந்து ஆலயங்களில் இனந்தெரியாத விஷமிகள் கதவுகளை உடைத்து நாசமாக்கியதுடன் பணம மற்றும் நகைகளை கொள்ளையடித்துச் சென்ற சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து சர்வதேச இந்து குருமார் ஒன்றியம் ஜனாதிபதிக்கான மகஜரை யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங் கத்திடம் கையளித்தனர்.

ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள், செயலாளர் சிவஸ்ரீ சர்வேஸ்வர ஸ்ரீ காந்தக் குருக்கள் உட்பட சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தினர் நேற்று யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரை சந்தித்து இம்மகஜரை கையளித்தனர்.

மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இச்சம்பவம் இந்து மக்களை மிகவும் மன வேதனையடையச் செய்துள்ளது. இச்சம்பவம் ஒன்று பட்டு வாழும் பல்வகை மதம் சார்ந்த மக்களை பிளவுபடுத்தும் நோக்காகச் செய்யப்பட்ட சம்பவமாக கருதக்கூடியதாக உள்ளது.

கொடிய யுத்தத்தினை அனுபவித்து அதில் இருந்து முற்று முழுதாக மீளாத நிலையில் மீண்டும் கலவரத்தினை தூண்டும் வகையில் இச் சம்பவம் நடாத்தப்பட்டிருப்பது மிக வேதனையைத் தருகின்றது. பத்திரிகைகளில் செய்திகளையும் படங்களையும் பார்க்கின்றபோது இச் சம்பவம் நன்கு திட்டமிட்டு செய்யப்பட்டிருப்பது தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது.

இந்து ஆலயங்களில் நடந்து வரும் திருட்டுகள் ஒரு புறம் நடந்து கொண்டே இருக்கின்றன. இந் நிலையில் இச்சம்பவம் மக்களை மேலும் பதட்டமடையச் செய்வதோடு கடந்தகால யுத்த சூழலையும் எண்ணத் தோற்றுவிக்கின்றது.

இதனைத் தொடராவண்ணம் உடனடியாக தடுத்து நிறுத்தல் வேண்டும். குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவேண்டும்.

மத வேற்றுமைகளை களைந்து இந்துக்களின் சுதந்திரமான வழிபாட்டிற்கு வழிசமைப்பதோடு அனைத்து மக்களினதும் வழிபாட்டு சுதந்திரமும் பாதுகாக்கப்படுவதற்கும் ஜனாதிபதி நேரடியாகத்தலையிட்டு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து இந்து மதகுருமார்கள் சார்பாக அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம எனக் குறிப்பிட ப்பட்டுள்ளது. (பா)



காங்கேசன்துறை வீதி, பருத்தித்துறை வீதி ஆகியவற்றின் வீதி அகலிப்பு வேலைகள் முடிவடைந்தும் சில வீட்டு முகப்புக்கள், கேடர்கள், பஸ் பயணிகள் தரிப்பிடம் போன்றவை இன்னமும் அகற்றப்படாமல் காணப்படுகிறது. இதன்படி கல்வியங்காடு பகுதியில் அகற்றப்படாத வீட்டின் ஒருபகுதியை காணலாம். (137)

# காங்கேசன்துறை வீதி அகலிப்பு துரித கதியில் முன்னெடுப்பு

(குருநகர்)

யாழ். காங்கேசன்துறை வீதி அகலிப்பும், காப்பெற் போடுதலும் கொக்குவில் நாச்சிமார் கோவிலடிப் பகுதியில் இருந்து யாழ். நகரம் வரையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இடையிடையே சிற்சில பகுதிகளில் சிறிய பகுதிகள் தொடர்ந்தும் செப்பனிடப்படுகின்ற வேலைகள் நடைபெறுவதைத் தவிர நூறு வீதமான வீதி வேலைகள் முடிவுக்கு வந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

அதன் பின்பாக மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகள், கனரக வாகனங்களின் வேக அதிகரிப்பால் விபத்துக்கள் ஏற்படக கூடிய அபாயநிலை ஏற்பட்டு வருகிறது.

இன்னமும் வீதிகளில் போக்குவரத்துக்களைக் குறிக்கும் வெள்ளைக் கோடுகள், மஞ்சள் கோடுகள் போடப்படவில்லை.

மேலும் வேகக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய இடங்களும் அதற்கான அடையாளங்களும் செய்து முடிக்கப்படவில்லை என மக்கள் குறைகூறுகின்றனர். (68)

# வயல்வெளி ஒழுங்கை திருத்தப்படுமா?

(கோப்பாய்)

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள நாயன்மார்கட்டு பாரதி வீதியையும், நல்லூர் வடக்கு விநாயகர் வீதியையும் இணைக்கும் வயல் வெளி ஒழுங்கை கடந்த நாற்பது வருட காலமாக எவராலும் கவனிப்பாரற்று திருத்தப்படாமையால் போக்குவரத்துக்கள் சிரமத்தின் மத்தியில் இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் விசனம் அடைந்துள்ளனர்.

இவ் வீதி பாரதி வீதியில் வசிப்போர் கல்வியன்காட்டுச் சந்தைக்குச் செல்லும் ஒரு பிரதான வீதியாகும்.

இவ் வீதி மழைகாலங்களில் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் இவ் வீதியின் நடுப் பகுதியில் இருந்த மதகும் பல வருடங்களுக்கு முன் சேதமடைந்த நிலையில் உள்ளது.

இம் மதகு ஒரு பிரதான மதவாகும் மழைகாலங்களில் நல்லூர் கல்வியங்காடு பகுதிகளில் தேங்கும் மழை நீர் இம் மதகு ஊடாகவே செம்மணிக் கடலை அடைகிறது.

மதகு சேத மடைந்த நிலையில் வெள்ள நீர் செல்லாது தடைப்பட்டு குடிமனைகளில் புகும் அபாயமும் ஏற்படுகின்றன.

வெள்ளம் பாயும் வாய்க்கால்களும் மூடப்பட்ட நிலை யில் உள்ளன. இதேபோல நாயன் மார்கட்டுப் பாரதி வீதியும் திருத்தப் படாமல், எவராலும் கவனிப்பாரற்ற நிலையில் உள்ளன.

இவ் விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் பார்வையிட்டு இக்குறைகளை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் பலரும் எதிர்பார்க்கின்றனர். (08)

# நீராவியடி விநாயகருக்கு வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீராவியடி ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 2.30 மணிக்கு புதிதாக அமைக்கப்பட்ட திருத்தேர் வெள்ளோட்டமும் மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து 22 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு இரதோற்சவமும், 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்த உற்சவமும், மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது.

## பொங்கல் விழா

(வவுனியா)

வவுனியா வடக்கு நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 10 ஆம் திகதி சிறப்பாக நடைபெறவுள்ளது. இவ் உற்சவத்தில் இந்த ஆண்டும் இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.(40)


## எரிபொருளுக்கு தட்டுப்பாடு பாவனையாளர் பாதிப்பு

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் பல. நோ.கூட்டுறவுச் சங்கத்தின் சங்கானை, சண்டிலிப்பாய், சித்தங்கேணி ஆகிய எரிபொருள் விற்பனை நிலையங்களில் கடந்த இரு நாட்கள் பெற்றோல் இல்லாமையால் வாகன சாரதிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை அனுராதபுரத்திலிருந்து வரும் எரிபொருள் தாங்கி இதுவரை வராமையாலேயே இந்த நெருக்கடி ஏற் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் எரிபொருள் தட்டுப்பாட்டால் பாவனையாளர்கள் வேறு எரிபொருள் நிலையங்களில் எரிபொருளைப் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.(104)



பொலிகண்டி மருதாம்புலம் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை கும்பாபிசேக தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற் விசேட உற்சவத்தின் போது சுவாமி வெளி வீதி உலா வருவதை காணலாம். (116)

# மாணவியின் உறக்கத்தால் அதிர்ச்சியடைந்தது பாடசாலை

(ஆனைக்கோட்டை)

நவாலி சென்.பீற்றர்ஸ் பாடசாலையில் முதலாம் தரத்தில் கல்வி பயிலும் மாணவி ஒருவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பாடசாலை இடைவேளையின் பின்னர் காணாமற் போனதை அடுத்து பாடசாலையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பாடசாலையில் கல்வி பயிலும் இம்மாணவி பாடசாலை இடைவேளையின் பின்னர் மணி ஒலித்து வெகு நேரமாகியும் வகுப்பறைக்கு வராததைக் கண்டுபிடித்த ஆசிரியரும், மாணவர்களும் பதற்றமடைந்ததுடன் அதிபருக்குத் தெரியப்படுத்திய நிலையில் அதிபரும், ஆசிரியர்களும், மாணவர்களும் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த மாணவி பாடசாலையின் சமீபமாகவுள்ள வீட்டில் தொலைக்காட்சி பார்த்துவிட்டு சீருடையுடன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தமையை ஆசிரியர்களும், மாணவர்களும் கண்டுபிடித்தனர்.

இதன்பின்னர் அவ்வீட்டுக்குச் சென்ற ஆசிரியர்களும் மாணவர்களும் அங்கு மாணவி இருப்பதை வீட்டுக்காரருக்குத் தெரிவித்தபோது அவர்கள் ஆச்சரியப்பட்டதுடன், தமக்குத் தெரியாது இம்மாணவி இங்கு வந்திருப்பதை ஆசிரியர்களுக்கு கூறியதை அடுத்து ஆசிரியர்கள் அம்மாணவியை பாடசாலைக்கு அழைத்துச் சென்றனர்.

குறித்த மாணவியைக் காணாது சிறிது நேரம் பாடசாலையில் பரபரப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (104)

## விசேட கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயத்தின் அபிவிருத்தி சம்பந்தமான விசேட கூட்டம் இன்று மாலை 7 மணியளவில் இடம்பெறவுள்ளது.

தரம் 1, 2, 3 மாணவர்களின் பெற்றோர்களை இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு வித்தியாலய அதிபர் ஆர்.இரவீந்திரன் அறிவித்துள்ளார்.

இவ்விசேட கூட்டத்தில் தென்மராட்சி வலய ஆரம்பக் கல்விப் உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.சர்வேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (இ)

கோபத்தோடு எழுந்தால் நஷ்டத்தோடு உட்காருவீர்கள். - மோசஸ்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## பகை வளர்த்து மாய்தல்!

நாடாக இருப்பினும், காடாக இருப்பினும், பள்ளமாக இருப்பினும், மேடாக இருப்பினும் கவலையில்லை. எங்கே மக்கள் நல்லவர்களாக இருக்கிறார்களோ அங்கேதான் நல்ல நாடு இருப்பதாகக் கொள்ளப்படுகிறது என்று சொல்கிறது புறநானூற்றுப் பாடல் ஒன்று. மக்கள் சிந்தனை உயர்ந்ததாக இருக்க வேண்டும். பாடறிந்து ஒழுகும் மக்களைக் கொண்ட நாடே மகிழ்ச்சிகரமாக இருக்க முடியும்.

உயர்ந்த சிந்தனை என்பது எது? சகமனிதனை மதித்தலும், அனைத்து உயிர்களிடத்திலுமான நேசமும் உயர் பண்பென இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. பிறர் துயர் துடைக்க வேண்டும் என்று கருதி மேற்கொள்ளும் குறிக்கோளே உயர்ந்ததாகிறது. அடுத்தவர் துன்பத்தைப் பார்க்கப் பொறாமல் மாற்ற நினைப்பவர்கள் உயர்ந்தோராகின்றனர்.

நம்மை நாமே குறுக்கிக் கொண்டும், பிளவுபடுத்திக் கொண்டும் மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருப்பதையே விரும்புவது ரசிப்பது எல்லாம் அவலமான மனநிலை! மக்களது அவலங்களை நீடிக்கவிட்டு அதையே காலாகாலத்திற்கும் அரசியல் கோசங்களாக்கிக் கொள்வது, நிச்சயம் அடிநிலை மக்களின் அன்றாட வாழ்க்கைக் கஷ்டங்களை பாடுகளை அறிந்தவர்களது செயலாக இருக்க முடியாது.

அவலத்துள் வாழும் மக்களது இன்றைய நிலை, இத்தகைய யதார்த்தத்தைப் பாராத உணர்ச்சிகரக் கோசங்களால் விளைந்தது தான். பொருளாதார பின்னடைவு, சொத்திழப்பு, மன உளைச்சல், உறுப்புக்களை – கணவர்மாரை – பிள்ளைகளை – பெற்றோரை இழந்த பரிதவிப்பு என்று மக்கள் அனுபவிக்கும் வாதைகளுக்கு வேறு யாரோ மீது மட்டும் பழிபோட முடியாது. பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் தமிழ்த் தரப்பில் இல்லையா?

இந்த நிலைமை உருவாகுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு, தமிழ்த் தலைமையாகக் காட்டிக்கொண்டவர்கள் சிறு முனகல் குரலாவது எழுப்பியதுண்டா? இந்த நிலைமைக்கு மக்களை இட்டு வருவதற்கான கோசங்களைத்தானே போட்டுக்கொண்டிருந்தார்கள்? இப்போதும், மக்களது அவலங்களைப் புரிந்து கொண்டு பேசுவதாகவா இவர்களது பேச்சு இருக்கிறது? பகை நச்சுச் சூழலை வளர்க்கும் சவால்களுடனல்லவா சென்று கொண்டிருக்கிறார்கள்!

நடைபெற்ற–நடைபெற்றுக் கொண்டிருக்கிற தீமைகள், அவலங்கள் எல்லாம் நிலைப்பதிலும் வளர்வதிலும் இவர்களுக்குப் பங்கில்லையா? நம்மை வாழவிடாமலடிக்கிற வறட்டுப் பெருமிதத் தளைகளிலிருந்து இவர்கள் விடுபடாமல், தமிழ் மக்களுக்கு இவர்களிடமிருந்து விமோசனமில்லை.

பகையுணர்ச்சியும் வன்மமும் வறட்டு ரோசங்களும் நம் வாழ்வை அழிப்பதைத் தெரிந்து கொள்வோம். மேதைமை மிக்க திரைப்பட இயக்குனரான அகிரா குரோசாவா தன் படங்களைப் பற்றிச் சொல்லுகையில்: "உலகெங்கிலும் மக்கள் தாமே தமக்குத் துன்பத்தை உண்டுபண்ணுவதற்கு முனைவதாகவே தோன்றுகிறது. இப்பொழுதை விட இன்புற்றிருப்பதற்கு மனிதனுக்கு உரிமை உண்டு. அச் செய்தியைத் தான் நான் உணர்த்த முயன்றிருக்கிறேன்." என்று சொன்னார்.

மக்கள் இன்புற்றிருக்கும் அந்த உரிமையைத் தடுத்துக் கொண்டிருப்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். தத்தம் மனதில் புதைந்துள்ள துவேசத்தையும் வன்முறையையும் உணர்ந்து அதை விலக்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அந்த முயற்சியில் ஈடுபடாதவர்களுக்கு, தமக்குள் மறைந்து கிடக்கும் துவேசத்தை தம்மால் அறிய முடியாமல் போகும். நம் துன்பங்களுக்கான பழியை எப்போதும் மற்றவர்களின் மீதே போட்டுக் கொண்டு மீளமுடியாமல் மறுகுவதாக இருக்கும்.

இப்போதாவது நாம் சிந்திக்க வேண்டும். மக்களுக்குத் துன்பங்களையே தொடர்ந்து சுமையாக ஏற்றிக் கொண்டிருக்கும் கோசங்களை நிறுத்த வேண்டும்.

– ஆசிரியர்.

# கசப்பான யுத்தத்தின் பின்னரே சமாதானத்தை நிலைநாட்ட முடிந்தது

## – பிரித்தானியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர்

கசப்பான யுத்த அனுபவங்களின் பின்னர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் சமாதானத்தை நாட்டில் நிலைநாட்ட முடிந்தது என பிரித்தானியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் கிறிஸ் நோனீஸ் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னரான நல்லிணக்க மற்றும் புனர்வாழ்வு முனைப்புக்களை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். புலிகளின் பிடியில் சிக்கியிருந்த 297000 மக்களை மீட்டு அவர்களை மீள் குடியேற்றியுள்ளது.

மேலும் முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளித்து அவர்களை சமூகத்துடன் மீள இணைத்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாரியளவில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சர்வதேச விசாரணைகளுக்கும் சுயாதீன விசாரணைகளுக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றது.

பிரித்தானியாவின் இறைமையை இலங்கை மதிப்பதாகவும், பிரித்தானியா இலங்கையின் இறைமையை மதிக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் மூலம் சுயாதீன விசாரணைகள் நடாத்தப்பட்டுள்ளது.

தென்ஆபிரிக்க உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பணிகளுக்கு நிகரான பணிகளை இலங்கை உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு ஆற்றியுள்ளது. இலங்கையின் தென் மற்றும் மத்திய பகுதிகளிலேயே அதிகளவான தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

பொருளாதார காரணிகளுக்காகவே அதிகளவானவர்கள் புகலிடம் கோரி வருகின்றனர். நாட்டில் நல்லிணக்கத்தை துரித கதியில் ஏற்படுத்த முடியாது. வடஅயர்லாந்து தென் ஆபிரிக்க போன்ற நாடுகளிலும் இன்னமும் சிற்சில பிரச்சினைகள் காணப்படுகின்றன.

கால வரையறையின் அடிப்படையில் முழுமையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# வங்கிக்கு வைப்பிடச் சென்ற 2 இலட்சத்து 81 ஆயிரம் கொள்ளை

வங்கி ஒன்றில் வைப்புச் செய்வதற்காக எடுத்துச் செல்லப்பட்ட இரண்டு இலட்சத்து எண்பத்து ஓராயிரத்து நூறு ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது. சிலாபம் - புத்தளம் வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் இப்பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை பணத்தை துவிச்சக்கர வண்டியில் எடுத்துச் சென்றவேளை கொள்ளையிடப்பட்டுள்ளது.

சிலாபம், ஜயபிம பிரதேசத்தைச் சேர்ந்த சீட்டிழுப்பு உரிமையாளர் ஒருவரது பணமே இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சிலாபம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# பிக்குவின் வாய்க்கு பிளாஸ்டர் ஒட்டு; 5 சந்திர வட்டக்கற்கள் கொள்ளை

பிக்குவின் வாய்க்கு பிளாஸ்டர் ஒட்டி சந்திர வட்டக்கற்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

பிக்குவின் வாய்க்கு பிளாஸ்டரை ஒட்டிவிட்டு விகாரையிலிருந்த ஐந்து சந்திரவட்டக்கற்களையும் கொள்ளையடித்த சம்பவமொன்று கெப்பத்திக்கொல்லாவையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

கெப்பத்திக்கொல்லாவ, ஹேரத் ஹில்மிலேவ விகாரையிலேயே இந்தக் கொள்ளைச் சம்பவம் அதிகாலை ஒரு மணியிலிருந்து மூன்று மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விகாரைக்குள் புகுந்த கொள்ளைக் கோஷ்டியினர் விகாராதிபதி மற்றும் சிவில் பாதுகாப்பு படை வீரர் ஆகிய இருவரின் வாய்களுக்கும் பிளாஸ்டரை ஒட்டிவிட்டே பெறுமதிவாய்ந்த ஐந்து சந்திரவட்டக்கற்களையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்திவருவதாகவும் தெரிவித்தனர்.

# ஒழுக்கம் தவறினால் கடும் நடவடிக்கை

ஒழுக்கமின்றிச் செயற்படும் தமது உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் கூட்டமைப்பின் அனைத்து அங்கத்துவ கட்சிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பல்வேறு அங்கத்துவ கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் அவர் கூறினார்.

கட்சிப் பிரதிநிதிகளின் செயற்பாடுகள் தொடர்பில் பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் தொடர்பில் குறித்த கட்சிகளின் செயலாளர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளதாக சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். பொலிஸ் விசாரணைகள் நிறைவடைந்ததன் பின்னரே மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறு ஒழுக்கமின்றிச் செயற்பட்ட உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள் மூவரின் கட்சி அங்கத்துவம் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் இருவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அண்மைக்காலமாக எம்பிலிப்பிட்டிய, ரிதிமாலியத்த பிரதேச சபைகளின் பிரதிநிதிகள், நபர்களைத் தாக்கியமை தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒரு இலட்சத்து 10 ஆயிரம் பேருக்கு வடக்கில் அடையாளஅட்டை இல்லை

வட மாகாணத்தில் சுமார் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் பேர் அடையாள அட்டையில்லாத காரணத்தினால் தேர்தலில் வாக்களிக்க முடியாத நிலையில் உள்ளனர் என்று பவ்ரல் அமைப்பு அறிவித்துள்ளது.

பவ்ரல் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை வழங்கும் நடமாடும் சேவையில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவ்வமைப்பின் நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் சிறிதரன் சபாநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார். கடந்த 2011ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் பிரகாரம் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் பேர் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். அதிலும் யாழ்.மாவட்டத்தில் மட்டும் 80 ஆயிரம் பேர் அடையாள அட்டை இல்லாத காரணத்தினால் வாக்களிக்க முடியாத நிலை காணப்படுகிறது என அவர் சுட்டிக்காட்டினார்.

இதனைக் கருத்திற்கொண்டு பிரதேச செயலகங்கள் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் ஆட்பதிவுத் திணைக்களத்துடன் இணைந்து நடமாடும் சேவை மூலம் அடையாள அட்டையில்லாதவர்களுக்கு அடையாள அட்டையினை வழங்க பவ்ரல் அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது இதன் மூலம் 20 ஆயிரம் பேருக்கு இந்த அடையாள அட்டையினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இதுவரை பவ்ரல் அமைப்பின் ஏற்பாட்டில் 1,700 பேருக்கு நடமாடும் சேவை மூலம் அடையாள அட்டை பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் தேர்தலில் வாக்களிப்பதற்கு தேசிய அடையாள அட்டை இல்லை என்றால் சாரதி அனுமதிப் பத்திரம், முதியோர் அடையாள அட்டை என்று தங்களை அடையாளப்படுத்தக் கூடிய ஏதாவது ஒரு ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டது. அதிலும் கட்டாயம் அடையாளஅட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தோம். அனைவருக்கும் வழங்க முடியாத நிலையில் அந்த நடைமுறை தவிர்க்கப்பட்டது.அத்துடன் இந்த நடமாடும் சேவையை தேர்தலுக்காக பவ்ரல் அமைப்பு மேற்கொள்ளவில்லை என்றும் பிரதேச அபிவிருத்திகள் அடைய வேண்டும் என்றால் பொது மக்களிற்குமுக்கியமான இவ்வாறான ஆவணங்களும் தேவை என்பதைக் கருத்திற்கொண்டே இது மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (15)

அலன் ஸ்ரார்த்தன் (ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம்) கட்டுரையிலிருந்து

**(அலன் ஸ்ரார்த்தன் பிராஸ்னோஸ் கல்லூரி, ஒக்ஸ்போர்ட் என்பனவற்றின் வரலாற்று ஆய்வாளரும் மற்றும் 16ஆம் நூற்றாண்டில் இலங்கையில் பௌத்த பிரதேசங்களில் போர்த்துக்கேயரின் ஏகாதிபத்தியம் அரசுரிமைக்கான மாற்றம், என்கிற நூலின் ஆசிரியரும் ஆவார். இந்த ஆய்வு பிபிசி சஞ்சிகையில் பிரசுரமானது)**

# இலங்கையிலும் பர்மாவிலும் பௌத்த பிக்குகள் ஏன் முஸ்லிம்களைத் தாக்குகிறார்கள்




**பௌத்த** பிக்குகளின் அனைத்து உள்ளார்ந்த தார்மீக கட்டளைகள் அனைத்திலும் கொலை செய்யாதே என்கிற சத்தியவாக்குத்தான் முதலாவதாக வருகிறது, மற்றும் ஏனைய பெரிய மதங்கள் அனைத்தையும் விட வன்முறையற்ற கொள்கைதான் பௌத்த மதத்தின் மிகவும் விவாதிக்கத்தக்க மையக்கருத்தாக உள்ளது. எனவே பிக்குகள் எதற்காக முஸ்லிம்களுக்கு எதிராக வெறுக்கத்தக்க பேச்சுகளை பேசுவதுடன், கும்பல்களுடன் இணைந்து டசின் கணக்கானவர்களின் மரணத்துக்கு காரணமாகிறார்கள்.

இது இந்து சமுத்திரத்தில் ஆயிரக் கணக்கான மைல்கள் தொலைவினால் பிரிக்கப்பட்டிருக்கும் இரண்டு நாடுகளான இலங்கையிலும் மற்றும் பர்மாவிலும் நடைபெறு-கிறது. அந்த இரண்டு நாடுகளில் எதுவும் இஸ்லாமிய போராளிகளின் அச்சுறுத்தலை எதிர்கொள்ளாததால் இந்த நிகழ்வு மிகவும் ஆச்சரியமளிக்கிறது. முஸ்லிம்கள் இந்த இரண்டு நாட்டிலும் பொதுவாக அமைதியானவர்களாகவும் சிறியளவு சிறுபான்மை இனத்தவர்களாகவே உள்ளனர்.

இலங்கையில் ஹலால் விடயம் பிரதான பிரச்சினையாக இருந்தது. பிக்குகள் தலைமைதாங்கும் பொது பல சேனா என்கிற பௌத்த படையணி நேரடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஊர்வலங்களை நடத்துவதுடன், முஸ்லிம்களின் வியாபார ஸ்தாபனங்களை புறக்கணிப்பதுடன் மற்றும் முஸ்லிம்களின் குடும்பப் பெருக்கத்திற்கு எதிராகவும் பிரச்சினையை கிளப்புகிறார்கள்.

இலங்கையில் முஸ்லிம்கள் யாரும் கொல்லப்படவில்லை என்றாலும், பர்மாவின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. இங்கு மத வெறுப்புணர்வை தூண்டக்கூடும் என்ற நோக்கத்தில் 2003ஆம் ஆண்டு சிறையில் அடைக்கப்பட்ட அசின் விராத்து என்கிற துறவியின் தலைமையிலான 969 என்ற குழுவினரால் எதிர்ப்புகள் தலையெடுத்துள்ளன. 2012ஆம் ஆண்டு விடுதலையான அவர், தன்னை மாறுபட்ட ஒரு பர்மிய பின்லாடன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மார்ச்சில், மத்திய பர்மாவில் உள்ள நகரமான மெய்கிற்றிலாவில் முஸ்லிம்களுக்கு எதிராக வெடித்த கலவரம் ஒன்றில் குறைந்தது 40 பேராவது இறந்துள்ளார்கள். இந்த வன்முறை ஒரு நகைக்கடை ஒன்றில் வைத்து ஆரம்பமானதாகக் கூறப்படுகிறது. இரண்டு நாடுகளிலும் இந்த இயக்கங்கள் ஒருவகையான பொருளாதாரக் குறைகள் என்கிற உணர்வுகள் காரணமாக பெரும்பான்மை இனத்தவர்களின் விரக்தியான அபிலாசைகளுக்கு மதச்சிறுபான்மை இனத்தவர்கள் பலிக்கடா ஆக்கப்பட்டுள்ளார்கள்.

ஆக்கிரமிப்பு எண்ணங்கள் அனைத்து பௌத்த போதனைகளுக்கும் விரோத மானவை. அவற்றை நீக்கும் வழிமுறைகளுக்காகவே பௌத்தம் பயன்படுகிறது. தியானத்தின் வழியாக அனைத்து உயிரினங்களினதும் மீதான இரக்க உணர்வு வளரும் அதேவேளை உங்கள் உணர்வுகளுக்கும் மற்றவர்களுடையதுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் தீர ஆரம்பிக்கும்.

பௌத்த கற்பித்தல்கள் எழுத்து மூலமாக அல்லாது வாய்மொழி மூலமாகவே புத்தரின் காலந்தொட்டு பல நூற்றாண்டுகளாக பின்பற்றி வரப்படுகிறது. புத்தரினால் வலியுறுத்தப்பட்ட தொகுப்புகளின் கூற்றுக்களில் தம் மதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள உள்ளார்ந்த பண்பு அகிம்சைக் கோட்பாடு பற்றியதாகும். அதன் முதல் வசனம் கற்பிப்பது “ஒரு மனிதன் அவனது எண்ணங்களின் தொகைகளினாலேயே உருவாகிறான்” என்று. ஒரு மனிதன் தீய எண்ணங்களை பேசுவதாலோ அல்லது அதை பின்பற்றுவதாலோ, ஒரு வண்டியை இழுக்கும் நரியின் பாதங்களை அதன் சக்கரம் பின்தொடர்வது போலவே, அதன் வலியும் அவனைத் தொடர்கிறது. பௌத்த தார்மீகத்தின் மிகவும் அடிப்படையான கோட்பாடு ஐந்து கட்டளைகள் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. அதற்கு துறவிகள் கீழ்படியக் கடமைப்பட்டுள்ளதுடன், அந்தத் துறையை சாராதவர்கள் அதைப் பின்பற்ற ஊக்கமளிக்கவும் வேண்டும். அதில் முதலாவதுவாழும் உயிரினங்களை கொல்வதிலிருந்து விலகியிருத்தல் என்பதாகும். பௌத்த தியானத்தின் ஒரு நோக்கம் சகல உயிரினங்களிடத்தும் ஒரு அன்பு சார்ந்த தன்மையை வழங்குவதே. தம்மபதத்தின் ஐந்தாவது வசனம் நமக்குச் சொல்வது, எந்த காலத்திலும் வெறுப்பை வெறுப்பு மூலம் தீர்க்கமுடியாது, ஆனால் வெறுப்பை அன்பினால் தீர்க்க முடியும் என்று. இது ஒரு நித்திய விதி. உண்மையில் கிறிஸ்தவ போதனைகளில்கூட ஒரு வலிமையான அமைதிவாதம் உள்ளது, “உங்கள் எதிரிகளையும் நேசியுங்கள் மற்றும் உங்களை துன்புறுத்துபவர்களுக்காகப் பிரார்த்தியுங்கள்” என்கிற வார்த்தைகள் யேசுவின் மலைப் பிரசங்கத்தில் உள்ளது.

எனினும் எந்த மதமும் ஆரம்பிக்கப்பட்ட உடனேயோ அல்லது பின்னரோ அதிகாரம் வேண்டி தனது ஆன்மாவை பலிகொடுக்க தயாரான ஜேர்மன் மந்திரவாதியை போல அரசாங்க அதிகாரத்துக்கு வேண்டிய ஒரு உடன்படிக்கைக்குள் நுழைகிறது. பௌத்த துறவிகள், வன்முறையை இறுதியாக பயன்படுத்துபவர்களாகிய அரசர்களினால் மாத்திரம் வழங்கப்படக்கூடிய ஆதரவு, காப்புரிமை மற்றும் கட்டளைகள் என்பனவற்றை கவனித்தார்கள். அரசர்களும் துறவிகளுக்கு உயர்ந்த தார்மீகப் பார்வையை உறுதிப் படுத்தக்கூடிய பிரபலமான சட்டபூர்வ தன்மையை வழங்குவதை முன்னெடுத்தார்கள். கிறிஸ்தவ அறப்போராளிகள், இஸ்லாமிய தீவிரவாதிகள் அல்லது சுதந்திரத்தை நேசிக்கும் நாடுகளின் தலைவர்கள் ஆகிய அனைவரும் ஒரு உயர்ந்த நல்ல பெயரை பெறுவதற்காக வன்முறை அவசியம் என்பதை நியாயப்படுத்தினார்கள். பௌத்த ஆட்சியாளர்கள் மற்றும் துறவிகள் இதற்கு விதிவிலக்கில்லை.

எனவே வரலாற்று ரீதியாக பௌத்தம் என்பது கிறிஸ்தவத்தைவிட அமைதியான ஒரு மதம் எனக் குறிப்பிட்டால் அது மிகை இல்லை. இலங்கையின் வரலாற்றில் மிகவும் பிரபலமான ஒரு அரசன் துட்டகைமுனு, அவர் கி.பி 2ஆம் நூற்றாண்டில் தீவின் ஒருங்கிணைப்பு தொடர்பாக மேற்கொண்ட ஒரு வரலாற்று நிகழ்வு மகாவம்சத்தில் காணப்படுகிறது.

அவர் தனது ஈட்டியில் ஒரு பௌத்த சின்னத்தை பதித்து மற்றும் பௌத்தர்கள் அல்லாத அரசர்களுடன் போரிட தன்னுடன் 500 துறவிகளையும்அழைத்துச் சென்றார் என மகாவம்சம் கூறுகிறது. அவர் தனது எதிரிகளை அழித்தார். இரத்த ஆறு ஓடியதன் பின்னர் சில ஞானிகள், “மரணித்தவர்கள் மிருகங்களைப் போன்றவர்கள் நீ பௌத்த விசுவாசத்தை பிரகாசப் படுத்து” எனக்கூறி அவரை சாந்தப் படுத்தினார்கள். பர்மிய ஆட்சியாளர்கள், “நியாயவாதியான அரசர்கள்” என அறியப்பட்டார்கள், உண்மையான பௌத்த கோட்பாட்டின் பெயரால் அவர்கள் யுத்தங்களை நியாயப் படுத்தினார்கள்.

ஜப்பானில் அநேக சமுராய்கள் ஜென் பௌத்த மத விசுவாசிகள், மற்றும் பல விவாதங்கள் அவர்களை சுற்றியுள்ளன - கொடூரமான குற்றம் புரிந்த ஒரு மனிதனைக் கொல்வது, ஒரு கருணைச் செயல் ஆகும், என்பது ஒரு உதாரணம். ஜப்பான் இரண்டாம் உலகப் போருக்காக அணிதிரண்டபோது இத்தகைய காரணங்கள் உச்சம் பெற்றிருந்தன.

பிரித்தானிய சாம்ராஜ்யத்தை விரட்டியடிக்க எழுந்த தேசிய இயக்கங்களில் பௌத்தம் ஒரு முன்னணிப் பாத்திரத்தை பர்மாவிலும் மற்றும் இலங்கையிலும் வகித்தது. எப்போதாவது இது வன்முறைக்கு வித்திட்டது. 1930இல் ரங்கூன் நேரடி நடவடிக்கையில் இறங்கியது, துறவிகள் நான்கு ஐரோப்பியர்களை கத்தியால் குத்தினார்கள்.

மிகவும் முக்கியமாக பௌத்தம் தங்கள் தேசிய அடையாளத்தின் ஒரு பகுதியாக பலரும் உணரத் தொடங்கினார்கள், மற்றும் இந்த புதிதாக சுதந்திரம் அடைந்த நாடுகளில் உள்ள சிறுபான்மை இனத்தவர்களின் நிலைமை மிகவும் அசௌகரியமானதாக உள்ளது.

> **போரின்போது இலங்கை முஸ்லிம்களுக்கு எதிரான மிகவும் மோசமானவன்முறை தமிழ் தீவிரவாதிகளின் கரங்களினால் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் போராட்டம் 2009இல் தீவிரவாதிகளை தோற்கடித்து மோசமான ஒரு முடிவுக்கு வந்ததின் பின்னர், பெரும்பான்மை இனவாத உணர்வுகள் சிறுபான்மை முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு புதிய இலக்கை கண்டுவிட்டது போலத் தெரிகிறது.**

1983இல் இலங்கையில் ஏற்பட்ட இனமுறுகல் உள்நாட்டு யுத்தமாக வெடித்தது. தமிழர் எதிர்ப்பு கலவரத்தை தொடர்ந்து தீவின் வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள தமிழ் பிரிவினைவாத குழுக்கள் சிங்கள பெரும்பான்மை அரசாங்கத்திடமிருந்து பிரிந்து செல்ல கோரிக்கை எழுப்பியது.

போரின்போது இலங்கை முஸ்லிம்களுக்கு எதிரான மிகவும் மோசமான வன்முறை தமிழ் தீவிரவாதிகளின் கரங்களினால் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் போராட்டம் 2009இல் தீவிரவாதி-களை தோற்கடித்து மோசமான ஒரு முடிவுக்கு வந்ததின் பின்னர், பெரும்பான்மை இனவாத உணர்வுகள் சிறுபான்மை முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு புதிய இலக்கை கண்டுவிட்டது போலத் தெரிகிறது.

இரு நாடுகளிலும் அவர்கள் ஒரு பெரும்பான்மை இனமாக இருந்தபோதிலும், அநேக பௌத்தர்கள் தங்கள் நாடுகளில் ஒன்றுபட்டுள்ள தங்கள் மதம் நிச்சயம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதை போன்ற ஒரு உணர்வை பங்கிட்டுக் கொள்கிறார்கள். உலக நிலைமை மிகவும் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது. தீவிர இஸ்லாத்தை பின்பற்றுபவர்கள் உலகெங்கிலுமுள்ள பெரும்பான்மையான வன்முறை மோதல்களின் மையமாக இருக்கிறார்கள். மதநம்பிக்கைகள் மூலம் மறுபிரவேசம் பெறும் மாற்று இயக்கிகள் பெறும் இறுதி முடிவாக தாங்கள் இருப்பதாக அவர்கள் உணர்கிறார்கள். மற்றும் இதர மதங்கள் மிகவும் கடினமாக இருக்கப்போவதாகவும் அவர்கள் உணர்கிறார்கள்.

# ஊடக விழுமியங்கள் தொடர்பான கட்சிகளின் கருத்தறிய நடவடிக்கை

(கொழும்பு)

ஊடக விழுமியங்கள் தொடர்பான சட்டமூலமொன்று நாடாளுமன்றில் முன் வைக்கப்படுவதற்கு முன்பாக அரசியல் கட்சிகளின் கருத்துக்கள் பெறுக்கொள்ளப்படும் என அமைச்சர் கெஹலிய ரம்புக்வல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பிரதி தற்சமயம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தவிர, ஊடக விழுமியங்கள் தொடர்பான சட்ட மூலம் ஊடகத்துறை அமைச்சின் ஆலோசனைக் குழுவிடமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சட்டமூலம் தொடர்பாக கட்சிகள் வழங்கும் பரிந்துரைகளை உள்ளடக்கிய வண்ணம் குறித்த சட்ட மூலம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அமைச்சர் கெஹலிய ரம்புக்வல தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இது தொடர்பாக சுதந்திர ஊடக அமைப்பு அதற்குப் பதிலளித்த அந்த இயக்கத்தின் இணைப்பாளர்சுனில் ஜய சேகர, இவ்வாறான ஒரு சட்ட மூலம் ஒன்று ஊடக சமூகத்தின் கருத்துக்கள் பெற்றுக்கொள்ளாது முன் வைக்கப்படுமானால் அதற்கு எதிர்ப்பு வெளியிடப்படும் என தெரிவித்தார்.

# பெற்றோலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு இல்லை

(கொழும்பு)

எதிர்வரும் நாட்களில் சந்தையில் பெற்றோலுக்கான தட்டுப்பாடு நிலவாது என கனியவள எணணைக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

களஞ்சியசாலையில் தற்போது 30 மெற்றிக் தொன் பெற்றோல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாகவும், மேலதிகமாக எண்ணைக் கப்பல் ஒன்று இலங்கை வருவதாகவும் குறிப்பிட்டார்.

நாட்டில் எதிர்வரும் சில தினங்களில் பெற்றோலுக்கான தட்டுப்பாடு எற்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. தற்போது மதுராஜவெல எண்ணைக் களஞ்சியசாலையில் தற்போது 6 ஆயிரம் மெற்றிக் தொன எண்ணையே களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும், இது எதிர்வரும் சில தினங்களுக்கு மாத்திரமே பயன்படுத்தக் கூடியதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் கனிய வள எண்ணைக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் கருத்துக்கூறும் போதே பெற்றோலுக்குத் தட்டுப்பாடு ஏற்படாது எனத் தெரிவித்தார்.

# கடமைநேரத்தில் பொலிஸாரைத் தாக்குவது மனித உரிமை மீறலாகும்

## உடனடி நடவடிக்கை காத்திருக்கிறது

(கொழும்பு)

கடமையை செய்யும் பொலிஸ் அதிகாரிகள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் தொடர்பில் எச்சரிக்கையாக இருக்குமாறும் அவ்வாறு தாக்குதல்களை நடத்துவோருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் மனித உரிமைகள் ஆணைக குழு, பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளது.

சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணும் பொறுப்புள்ள பொலிஸாரை இலக்கு வைத்து நடத்தப்படும் தாக்குதல்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது என்று சுட்டிக் காட்டியுள்ள ஆணைக்குழுவின் தலைவர் பிரதீப மாகாநாமஹேவா, இது பொலிஸாரின் மனித உரிமைகளை மீறுவதாகும் என்றும் கூறியுள்ளார்.

இவ்வாறான சம்பவங்களை உடனடியாக மனித உரிமை ஆணைக்குழு விசாரணை செய்து குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுத்து தாமதமின்றி நீதி கிடைப்பதை உறுதி செய்யவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# வகுப்புத் தடை விதிக்கப்பட்டவர்களுக்கு பரீட்சைக்குத் தோற்ற வாய்ப்பு

(கொழும்பு)

வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு பரீட்சைக்குத் தோற்ற வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் அண்மையில் இடம்பெற்ற மோதல் தொடர்பில் மாணவர்கள் சிலருக்கு வகுப்புத் தடை விதிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக நிர்வாகம் நேற்றைய தினம் கூடி இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் மகிந்த எஸ்.ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் குறித்த மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் குறிப்பிட்டுள்ளார்.

# கொழும்பு - வவுனியா ரயில் குருநாகலில் இடைநிறுத்தம்



(கொழும்பு)

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி பயணித்தை ரயில் குருநாகல், கிரியால பிரதேசத்தில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கிரியால பிரதேசத்தில் ரயில் தண்டவாளத்தை வழிமறித்து ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்று வருவதன் காரணமாக இந்த ரயில் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டறை தெரிவித்துள்ளது.

நேற்று காலை 6.50 மணியளவில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து வவுனியா நோக்கி பயணத்தை ஆரம்பித்த ரயிலே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

# 100 கிலோ தங்கத்தைப் பெற்றுத்தருவதாகக் கூறி மோசடி செய்த முன்னாள் புலனாய்வு அதிகாரி கைது

(கொழும்பு)

பயங்கரவாத புலனாய்வு பிரிவின் ஓய்வு பெற்ற அத்தியட்சகருக்கு விளக்கமறியல்

15 வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பயங்கரவாத புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற உதவிப்பொலிஸ் அத்தியட்சகரை யூன் 17 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழுமபு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கனடாவில் வேலை பெற்றுத்தருவதாக கூறியே குறித்த சந்தேகநபரான ஆனந்த ரணசிங்க 2.6 மில்லியன் ரூபாவை பெற்று பலரை ஏமாற்றியுள்ளதாக கோட்டை மற்றும் கொம்பனி வீதி பொலிஸார் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மத்திய வங்கியில் கையிருப்பிலுள்ள தங்கத்தில் 100 கிலோகிராம் தங்கத்தை பெற்றுத்தருவதாக பலரை ஏமாற்றிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 11 நபர்களில் குறித்த நபர் 6 ஆவது சந்தேகநபராவார்.

அத்துடன், 15 வழக்குகளிலும் குறித்த சந்தேகநபர் முக்கிய சந்தேகநபராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குறித்த சந்தேகநபர் வெளிநாட்டில் வேலை வாய்ப்புகளை தேடிவந்தவர்களில் எட்டுப்பேரை ஏமாற்றிப் பணம் பெற்றதாக கோட்டை பொலிஸாரும் மேலும் 7 பேரை ஏமாற்றியதாக கொம்பனிவீதி பொலிஸாரும் குற்றஞ்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# 32 வயது வரை 32 கொள்ளை

(கொழும்பு)

வீடுகளை உடைத்து கொள்ளையடித்தல் உள்ளிட்ட 32 கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் 32 வயதாக நபரை கைது செய்துள்ளதாக தெரிவித்த கணேமுல்ல பொலிஸார் அவரிட்மிருந்து பெறுமதியான பொருட்களையும் கைப்பற்றியுளளதாகத் தெரிவித்தனர்.



கம்பஹா மாகோவிட்டையை வதிவிடமாகக் கொண்ட குறித்த சந்தேக நபர் ஜா-எல பகுதியில் இடம்பெற்ற 15 கொள்ளைச் சம்பவங்களுடனும் கணேமுல்ல பகுதியில் இடம்பெற்ற 12 கொள்ளைச் சம்பவங்களுடனும் கம்பஹாவில் இடம்பெற்ற இரண்டு கொள்ளைச்சம்பவங்களுடனும் தொடர்புபட்டவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# யுத்த வெற்றியைவிட நிரந்தர ஒன்றிணைவு அவசியம்

(கொழும்பு)

யுத்தத்தின் மூலம் பெற்றுக் கொண்ட வெறறி நிரந்தரமானதல்ல, எத்தனை தடவைகள் இலங்கை ஒன்றிணைக்கப்பட்டுள்ளது? அது நிரந்தர ஒன்றிணைவு அல்ல அது தற்காலிக ஒன்றிணைவு மாத்திரமே என சிறு ஏற்றுமதி பயிர் ஊக்குவிப்பு அமைச்சர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

ஒன்றுபட்ட சகோதரத்துவத்துடன் கூடிய இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்புவோம் என்ற தொனிப்பொருளில் அகலவத்த மிஹிது கல்லூரியில் நடைபெற்ற செயலமர்வில் அமைச்சர இதனைக் கூறியுள்ள்ளார்.

இதேவேளை, இந்த செயலமர்வில் உரையாற்றிய தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, ஒரே இனமாக இலங்கையர்களை கட்டியெழுப்பும் செயற்பாடு இன்னமும் பெயரளவில் மாத்திரமே உள்ளதாக தெரிவித்துள்ளார்.

# டெங்கு தொற்று காரணமாக கொழும்பு சட்டபீடம் மூடப்பட்டது

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்டபீடம் டெஙகு தொற்று அபாயம் காரணமாக மூடப்பட்டுள்ளது. எதிர்வரும் 10 ஆம் திகதி வரையில் குறித்த பீடத்தை மூட பல்கலைக்கழக நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

கொழும்பு பல்கலைக் கழகத்தில் சட்ட பீட கட்டடத்தின் மூன்றாம் மாடி கூரை இல்லாததன் காரணமாக அங்கு நீர் நிறைந்திருநதது. இந்த நிலையில் இதனை ஆய்வு செய்த கொழும்பு நகரசபையின் வைத்திய அதிகாரிகள் குழு, அதில் டெங்கு குடம்பிகள் இருப்பதைக் கண்டறிந்தனர்.

இதனைத் தொடர்ந்து சட்ட பீடத்தை மூடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. இதனையடுத்து பலகலைக்கழக உபவேந்தர் தலைமையில் நேற்றுமுன் தினம் மாலை கூடிய நிர்வாக சபை, சடடபீடத்தை எதிர்வரும் 10 ஆம் திகதி வரையில் மூடத் தீர்மானித்தது

# கல்வியை மேம்படுத்தவே புரிந்துணர்வு ஒப்பந்தம்



(கொழும்பு)

சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தமானது கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக செய்துகொள்ளப்பட்டதொன்றாகும் என்று அமெரிக்கா அற்றிவித்துள்ளது.

திருகோணமலை நகர சபையின் கீழ் இயங்கும் திருகோணமலை பொது நூலகத்தில் அமெரிக்க நிலையம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கான ஒப்பந்தம் அண்மையில் கைச்சாத்திடப்பட்டது.

திருகோணமலை நகர சபையின் தலைவரும் இலங்கைக்கான அமெரிக்க நிலையத்திற்கான பணிப்பாளர் கிருஸ். கோபர் ஸ்டீல் ஆகியோருமே இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இளைஞர் யுவதிகளின் தொழில்நுட்ப அறிவினை விருத்தி செய்வதற்காகவும் நூலகத்தில் வாசிப்பில் ஈடுபடுபவர்களின் அறிவு மற்றும் ஆற்றலை வளர்க்கும் செயற்பாடுகளும் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மாணவர்களுக்கிடையே சமாதானத்தையும் சமத்துவத்தையும் கட்டியெழுப்பும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகவும் இந்த அமெரிக்க நிலையம் அமைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையிலேயே அமெரிக்க தூதரகத்தின் பேச்சாளர் இன்று மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். கண்டி மாநகர சபையுடன் இணைந்து கண்டி பொது நூலகத்தில் 2005 ஆம் ஆண்டும் யாழ்ப்பாணத்தில் 2011 ஆம் ஆண்டும் இதேபோன்ற நிலையங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சமுர்த்தி அபிவிருத்திச் செயற்பாடுகளூடாக பின்தங்கிய கிராமத்தை மேம்படுத்த வேண்டும்



(யாழ்ப்பாணம்)

கிராமங்கள் தோறும் மறுமலர்ச்சி ஏற்படுத்தி உங்கள் வாழ்விலும் எழுச்சி ஏற்பட வேண்டும் ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.பிரதேச செயலகத்தில் புதிதாக நியமனம் பெற்ற சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான ஆறுநாள் பயிற்சியின் இரண்டாம் நாள் நிகழ்வினை தொடக்கி வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரசாங்கத்தின் வறுமை ஒழிப்புத்திட்டத்தின் ஒரு நோக்கமாக சமுர்த்தி திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன். வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுவதன் மூலம் நாட்டினை அபிவிருத்திப் பாதையில் முன்னோக்கி கொண்டு செல்லும் முகமாக இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியின் பயனாகக் கடந்த 1998ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்.மாவட்டத்தில் முதன் முறையாக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோதத்தர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டன. மீண்டும் 15 ஆண்டுகள் கடந்த பின்னர் தற்போது புதிதாக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டுள்ளன.

ஆறு நாள் பயிற்சி நெறியானது மிகவும் கடினமாக இருப்பினும் இப் பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்து வெளியேறும் போது கடினமான சூழ்நிலைகளில் கூட உங்கள் பணியினை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு ஏதுவாக அமைவதுடன். இப் பயிற்சிநெறியினை பெற்றுக் கொள்வதன் மூலம் மக்களுக்கு சேவையாற்றும் மனப்பக்குவம் பணிபுரியும் திறன் அதிகாரிகளின் பணிப்புக்களுக்கு கட்டுப்பட்டு செயலாற்றும் தன்மை. நிர்வாகத்திறன். ஆளுமைப்பண்பு போன்றவை உங்கள் மத்தியில் கட்டியெழுப்பப்பட்டு சிறந்த அரச பணியாளர்களாக சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவீர்கள் என்றார். இதன்போது யாழ்.மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் மகேஸ்வரன் ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேசசபை எதிர்கட்சித் தலைவர் அ.ரவீந்திரதாசன், வடமாகாண கலவிக்குழுத் தலைவர் திருவாளர் செல்வவடிவேல் சமுர்த்தி அதிகாரிகள் புதிதாக நியமனம் பெற்ற சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



அண்மையில் கைதடி முதியோர் இல்லத்தில் யாழ்.பொது நூலகத்தினால் நடாத்தப்பட்ட நடமாடும் நூலக சேவையில் முதியோர்கள் நூல்களை பார்வையிடுவதைக் காணலாம். (15)

## சாரணர் சேவைவாரம் 8ஆம் திகதிமுதல் அனுஷ்டிப்பு

(ஈச்சமோட்டை)

இலங்கை சாரணர் சங்கத்தினர் அகில இலங்கை ரீதியாக வருடா வருடம் ஏற்பாடு செய்யும் சாரணர் சேவை மற்றும் தொடர்பாடல் வாரம் எதிர்வரும் 8ஆம் திகதி முதல் யூன் மாதம் 22ஆம் திகதி வரை நடைபெறும் என தேசிய சாரணர் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளினை யாழ்.சாரணர் மாவட்டத்தினரும் மேற்கொண்டுள்ளனர். இலங்கை சாரணர் சங்கத் தலைமையகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் சாரணர் சேவை வாரத்தில் ஈடுபடும் சாரணர்கள் தொகை மதிப்பு சின்னம் சீருடையில் அணிந்திருத்தல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே யாழ்.மாவட்டத்திலும் தொகை மதிப்பு சின்னம் அணிந்த சாரணர்கள் இச் சேவை வாரத்தில் ஈடுபடவுள்ளனர். (42)

## இராதோற்சவம்

வரணி வடக்கு சிமிழ் அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் இன்று புதன்கிழமை தேர் உற்சவமும், நாளை வியாழக்கிழமை தீர்த்த உற்சவமும், வெள்ளிக்கிழமை பட்டுத்தீர்த்தமும் இடம்பெறவுள்ளது.

இரவு நிகழ்வாக தீர்த்த உற்சவத்தன்று காத்தவராயன் சிந்து நடை நாடகமும், சைவத்தொண்டர் க.இராசையாவின் சிறப்புச் சொற்பொழிவும் நடைபெறுமென ஆலய நிர்வாக பொருளாளர் தெரிவித்துள்ளார். (150)




# சமநிலையில் நிறைவுற்ற பிரேசில், இங்கிலாந்து ஆட்டம்



(ரியோ டி ஜெனிரோ)

இங்கிலாந்து, பிரேசில் அணிகள் மோதிய சர்வதேச நட்பு கால்பந்து போட்டி சமநிலையில் நிறைவடைந்தது.

பிரேசிலில் உள்ள ரியோ டி ஜெனிரோவில் நடந்த சர்வதேச நட்பு கால்பந்து போட்டியில், பிரேசில், இங்கிலாந்து அணிகள் மோதின. போட்டியின் முதல் பாதியில் இரு அணி வீரர்களும் கோல் எதுவும் அடிக்கவில்லை.

பின் இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட பிரேசில் அணிக்கு பிரட் (57ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு இங்கிலாந்தின் அலெக்ஸ் (67ஆவது நிமிடத்தில்) பதிலடி கொடுத்தார்.

தொடர்ந்து ரூனே (79ஆவது நிமிடத்தில்) மற்றொரு கோல் அடிக்க இங்கிலாந்து முன்னிலை பெற்றது. இதற்கு போல் (82ஆவது நிமிடத்தில்) ஒரு கோல் அடித்து கைகொடுக்க, பிரேசில் அணி தோல்வியில் இருந்து தப்பியது. முடிவில், போட்டி 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையானது.

# சம்பியன் கிண்ண ஒரு நாள் தொடர் இங்கிலாந்தில் நாளை ஆரம்பம்

(லண்டன்)

சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ண ஒருநாள் கிரிக்கெட் தொடர் நாளை இங்கிலாந்தில் ஆரம்பமாகவுள்ளது. இந்த போட்டியில் பங்கு பெறும் நாடுகள் இரண்டு குழுக்களாக பிரிக் கப்பட்டுள்ளன.

இதில் ஏ பிரிவில் அவுஸ்ரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து மற்றும் இலங்கை அணிகள் இடம்பெற்றுள்ளன. பி பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் இடம்பிடித்துள்ளன..

நாளை வேல்ஸ் மைதானத்தில் நடைபெறும் முதல் போட்டியில் இந்திய தென்னாபிரிக்க அணிகள் மோதவுள்ளன. இலங்கை அணியின் முதல் போட்டி வேல்ஸ் மைதானத்தில் நியூசிலாந்து அணிக்கெதிராக 9 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. போட்டியில் இரண்டு பிரிவிலும் உள்ள ஒவ்வொரு அணியும் மற்ற மூன்று அணிகளை எதிர்த்து ஆடுகிறது.

அவ்வகையில் ஆரம்பகட்ட போட்டிகளை அடுத்து, இரண்டு அரை யிறுதிப் போட்டிகள் 19 மற்றும் 20 ஆம் திகதி நடைபெற்ற பின்னர், இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும் அணிகள் 23 ஆம் திகதி எட்ஸ்பாஸ்டன் நகரில் கோப்பையை கைப்பற்றுவதற்காக மோதவுள்ளன. சம்பியன்ஸ் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடர் முதல் முறையாக 1998 ஆம் ஆண்டு பங்களாதேஷில் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நிச்சயமற்ற நிலையில் எஸ்.எல்.பி.எல்.

(கொழும்பு)

எதிர்காலத்தில் இலங்கை பிரிமியர் லீக் போட்டியை நடத்துவதில் நிச்சயமின்மை ஏற்பட்டிருப்பதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

எஸ்.எல்.பி.எல் அணி உரிமையாளர்கள் விலகிவரும் நிலையில் இந்த சூழல் ஏற்பட்டுள்ளது. முதலாவது எஸ்.எல்.பி.எல். தொடர் கடந்த ஆண்டு முதல் முறை நடத்தப்பட்டது. ஆனால் இந்திய வீரர்கள் தொடரில் பங்கேற்காதது மற்றும் குறிப்பிடத்தக்க அளவான இரசிகர்களை கவராததால் ஏற்பட்டிருக்கும் வர்த்தக தரம் ஆகியவை எதிர்காலத்தில் நிச்சயமின்மையை ஏற்படுத்தியிருப்பதாக அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த ஆண்டில் பிரச்சினையை சந்திக்க வேண்டியுள்ளது. அணி உரிமையாளர்கள் வெளியேறி வருகின்றனர். நாம் விரும்பியோ விரும்பாமலோ இந்தியா எமது கிரிக்கெட் பொருளாதாரத்தில் முக்கிய காரணியாக உள்ளது. இந்தியா இன்றி எதனையும் வெற்றிபெற முடியாது. இது தொடர்பில் நாம் (விளையாட்டுத்துறை அமைச்சு) கிரிக்கெட் சபையுடன் பேச்சுவார்த்தை நடத்தி தேவையான நடவடிக்கையை எடுக்க முயற்சிப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஒரு நாள் தரப்படுத்தல் இந்திய அணி முதலிடம்





(லண்டன்)

தரப்படுத்தலில் முதலிடம் பிடித்த இந்திய அணிக்கு சர்வதே கிரிக்கெட் சபையால் ஒரு கோடி ரூபா பணப் பரிசு வழங்கப்பட்டது.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,) சார்பில், ஒவ்வொரு ஆண்டும், தரப்படுத்தலில் முதல் மூன்று இடங்களைப் பிடிக்கும் அணிகளுக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்படும்.

இந்த ஆண்டுக்கான விருதுக்கு அணிகளைத் தேர்வு செய்ய, கடந்த ஏப்.,1ஆம் திகதி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இதன்படி ஐ.சி.சி., ஒருநாள் போட்டிக்கான தரப்படுத்தலில் முதல் மூன்று இடங்களை இந்தியா (119 புள்ளி), அவுஸ்ரேலியா (116), தென்னாபிரிக்கா (113) அணிகள் பிடித்தன.

நேற்று முன்தினம் இங்கிலாந்தின் கார்டிப் நகரில் நடந்த விழாவில், முதலிடம் பிடித்த இந்திய அணிக்கு விருதுடன், ரூ. ஒரு கோடி வழங்கப்பட்டது. இதனை முன்னாள் ஐ.சி.சி., தலைவர் டேவிட் மோர்கனிடம் இருந்து இந்திய கப்டன் டோனி பெற்றார்.



# 900ஆவது வெற்றி

(பாரிஸ்)

நட்சத்திர வீரர் ரோஜர் பெடரர் (சுவிஸ்), ரென்னிஸ் போட்டிகளில் தனது 900ஆவது வெற்றியைப் பதிவு செய்து அசத்தினார். பிரெஞ்ச் ஓபன் கிராண்ட் ஸ்லாம் ரென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு 4ஆவது சுற்றில், உள்ளூர் வீரர் கில்லஸ் சைமனுடன் நேற்று முன்தினம் மோதிய பெடரர் 6,1 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றார்.

இரசிகர்களின் ஆதரவுடன் கடும் நெருக்கடி கொடுத்த சைமன் 6,4, 6,2 என்ற கணக்கில் அடுத்த 2 செட்களையும் கைப்பற்றி பதிலடி கொடுத்தார். இதனால் பெடரர் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறுவார் என எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில், தனது அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்திய பெடரர் கடைசி 2 செட்களையும் கைப்பற்றி 6,1, 4,6, 2,6, 6,2, 6,3 என 5 செட்களில் போராடி வென்று காலிறுதிக்கு முன்னேறினார். இது ஏ.டி.பி. போட்டிகளில் அவர் பெறும் 900ஆவது வெற்றி ஆகும்.

அமெரிக்காவின் ஜிம்மி கானார்ஸ் 1,156 வெற்றி, இவான் லெண்டில் (செக்.) 1,068, கில்லர்மோ விலாஸ் (ஆர்ஜென்ரீனா) 940 வெற்றியுடன் முதல் 3 இடங்களில் உள்ளனர். கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் தொடர்ந்து 36ஆவது முறையாக பெடரர் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. அவர் இதுவரை 17 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் உலகின் முதல் நிலை வீரர் நோவாக் ஜோகோவிச் (சேர்பியா) 4-6, 6-3, 6-4, 6-4 என்ற செட் கணக்கில் 16ஆம் நிலை வீரர் பிலிப் கோஹிஷெரிப்பரை (ஜேர்மனி) தோற்கடித்து காலிறுதிக்கு முன்னேறினார்.

இதேவேளை, நட்சத்திர வீரர் நடால் மற்றும் மரிய ஷரபோவா ஆகியோரும் காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான ரேபிள் ரென்னிஸ் ஒன்பது இடங்களைப் பிடித்தது யாழ். மாவட்டம்



சுந்தரபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை



யாழ். மத்திய கல்லூரி



சுந்தரபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை



தெல்லிப்பளை யூனியன் கல்லூரி

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான ரேபிள் ரென்னிஸ் போட்டியில் யாழ். மாவட்டப் பாடசாலை அணிகள் ஒன்பது இடங்களைப் பிடித்துள்ளது.

வடமாகாணப் பாடசாலை அணிகளுக்கிடையிலான ரேபிள் ரென்னிஸ் போட்டி கடந்த 1,2,3ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 15 மற்றும் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் அணிகளுக்கிடையிலான போட்டி இடம்பெற்றது. இதில் யாழ். மாவட்ட பாடசாலை அணிகள் ஒன்பது இடங்களைப் பிடித்து அசத்தியுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பிடித்த அணிகளின் விபரம் வருமாறு:

ஆண்கள்

15 வயதுப்பிரிவு : முதலாமிடம் வவுனியா சுந்தரபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, இரண்டாமிடம் யாழ். மத்திய கல்லூரி, மூன்றாமிடம் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை.

19 வயதுப் பிரிவு : முதலாமிடம் யாழ். மத்திய கல்லூரி, இரண்டாமிடம் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, மூன்றாமிடம் யாழ். இந்துக் கல்லூரி.

பெண்கள்:

15 வயதுப் பிரிவு : முதலாமிடம் வவுனியா சுந்தரபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, இரண்டாமிடம் வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை, மூன்றாமிடம் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி.

19 வயதுப் பிரிவு : முதலாமிடம் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, இரண்டாமிடம் வவுனியா சுதந்திரபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, மூன்றாமிடம் கொக்குவில் இந்துக்கல்லூரி.

முதல் மூன்று இடங்களைப்பிடித்துக் கொண்ட அணிகள் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதிபெற்றமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டிகள் வடமாகாண உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சத்தியபாலன் தலைமையில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (93)

# மாகாண மட்ட வேகநடை வவுனியா மாவட்டம் அசத்தல்





(கிளிநொச்சி)

வடமாகாண வீர,வீராங்கனைகளுக்கிடையில் நடைபெற்ற வேகநடைப் போட்டியில் வவுனியா மாவட்டம் இரு பிரிவுகளிலும் அசத்தியதுடன், சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இவ்வேகநடைப் போட்டி வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் கடந்த 1ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தில் நடாத்தப்பட்டது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதான முன்றலில் இருந்து ஆரம்பமான இப்போட்டியில் கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் பங்குகொண்டனர். இதில் ஆண்களுக்கான போட்டி 20 கிலோ மீற்றர் தூரம் கொண்டதாகவும், பெண்களுக்கான போட்டி 10 கிலோ மீற்றர் தூரம் கொண்டதாகவும் நடைபெற்றது.

ஆண்கள் பிரிவில் முதல் 10 இடங்களைப் பெற்றிருந்தவர்களும், பெண்கள் பிரிவில் முதல் 06 இடங்களைப் பெற்றிருந்தவர்களும் தேசிய மட்ட வேகநடைப் போட்டிகளில் பங்குகொள்ளவுள்ளனர். இத்தேசிய மட்டப் போட்டி எதிர்வரும் 29ஆம் திகதி கதிர்காமத்தில் நடைபெறவுள்ளது.

ஆண்கள் பிரிவில் முதல் பத்து இடங்களைப் பிடித்தோர் விபரம் வருமாறு: சந்திவேந்தன் (வவுனியா), ஜெனந்தாஸ் (மன்னார்), ரசீகரன் (வவுனியா), தர்மராஜ் (வவுனியா), குகனேஸ்வரன் (வவுனியா), அலன்ரீன் (வவுனியா), மனோத் (வவுனியா), தமிழ்ச்செல்வன் (வவுனியா), பிரபு (கிளிநொச்சி), ஸ்கைலன் (மன்னார்)

பெண்கள் பிரிவில் முதல் ஏழு இடங்களைப் பிடித்தோர் விபரம்: கோகுலவாணி (வவுனியா), கனகேஸ்வரி (வவுனியா), டென்சிகா (கிளிநொச்சி), பாபுஜி (வவுனியா), நாகமைலி (வவுனியா), சுதனாலோஜினி (வவுனியா), சுதர்சினி (வவுனியா). (93)

## கிளி. ஆதவன் வி.க.வின் இறுதியாட்டம் இன்று

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஆதவன் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாவட்ட மட்டத்திலான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் மாலை ஆதவன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் ஆதவன் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் இக் கரப்பந்தாட்டப் போட்டித் தொடரில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த முன்னணி அணிகள் பல பங்குகொண்டன.

இதில் ஆண்கள் பிரிவின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் கிளிநொச்சி இளம் தென்றல் அணியும், கிளிநொச்சி ஆதவன் அணியும் மோதின. ஐந்து செட்களைக் கொண்ட இப்போட்டியில் இளம்தென்றல் அணி 3-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் புதிய பாரதி அணியும், வட்டக்கச்சி குறிச்சி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய புதிய பாரதி அணி 3-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இன்றைய தினம் மாலை நடைபெறும் இறுதிப் போட்டியில் இளம்தென்றல் அணியும், புதிய பாரதி அணியும் மோதவுள்ளன.

இதேவேளை, பெண்களுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் புதிய பாரதி அணி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. புதிய பாரதி அணிக்கும், விபுலானந்தா அணிக்குமிடையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் புதிய பாரதி அணி 3-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது. (93)

# மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கம்

# யாழ். மாவட்ட பாடசாலைகள் ஆதிக்கம்




யாழ். இந்துக் கல்லூரி




ஹாட்லி கல்லூரி




உடுப்பிட்டி மகளிர் கல்லூரி




மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டியில் யாழ். மாவட்டப் பாடசாலை அணிகள் ஆதிக்கம் செலுத்தியுள்ளன.

வடமாகாணப் பாடசாலை அணிகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டி கடந்த 1,2,3ஆம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் 15 மற்றும் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் அணிகளுக்கிடையில் நடைபெற்ற இப்போட்டியில் யாழ். மாவட்டப் பாடசாலை அணிகள் ஆதிக்கம் செலுத்தியதுடன் நான்கு பிரிவுகளிலும் முதலிடத்தைப் பிடித்துள்ளன.

இதில் முதல் மூன்று இடங்களைப் பிடித்துக் கொண்ட அணிகளின் விபரம் வருமாறு:

ஆண்கள்:

15 வயதுப் பிரிவு : முதலாமிடம் யாழ். இந்துக்கல்லூரி, இரண்டாமிடம் ஹாட்லிக் கல்லூரி, மூன்றாமிடம் சென். ஜோண்ஸ் கல்லூரி.

19 வயதுப் பிரிவு முதலாமிடம் ஹாட்லிக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, மூன்றாமிடம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

பெண்கள் பிரிவு

15 வயதுப் பிரிவு : முதலாமிடம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் வடமராட்சி மெதஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, மூன்றாமிடம் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி.

19 வயதுப் பிரிவு : முதலாமிடம் வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, இரண்டாமிடம் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, மூன்றாமிடம் யாழ். இந்து மகளிர் கல்லூரி.

இதில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த அணிகள் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

## கிண்ணம் வென்றது ஊரெழு றோயல்

(யாழ்ப்பாணம்)

சதீஸின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் ஊரெழு றோயல் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

யாழ். கொட்டடி சனசமூக நிலையம் யாழ். மாவட்ட மென்பந்தாட்ட அணிகளுக்கிடையில் அணிக்கு 6 பேர் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியினை நடாத்தியது.

இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் ஊரெழு றோயல் அணியினை எதிர்த்து அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழக அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 46 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஊரெழு றோயல் அணி 4.5 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் சதீஸ் 35 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

## சாதிப்போம்

(லண்டன்)

சம்பியன் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் சாதிக்கும் ஆற்றல் எமது அணிக்கே அதிகம் உள்ளது. இங்கிலாந்தின் கால நிலைக்கு ஏற்ப எமது பந்து வீச்சாளர்கள் சிறப்பான முறையில் செயற்படுவார்கள். சர்வதேச கிரிக்கெட் சபையின் கிண்ணம் ஒன்றையும் இது வரை வெல்லவில்லை என்ற குறை இத்தொடருடன் தீரும் என தென்னாபிரிக்க அணிக் கப்டன் டிவில்லியர்ஸ் தெரிவித்துள்ளார்.



# தந்தியும் தபாலட்டையும்

- மணிமேகலா -

கடிதம் எழுதி, உறையி விட்டு, முத்திரை ஒட்டி, முகவரி எழுதி, ஒரு செய்தி அனுப்பிய காலம் ஒன்று இருந்தது என்றுதான்





இனி எழுத வேண்டும். பதிலுக்காக காக்கி உடை-யோடு சைக்கிளில் வரும் தபாற்காரருக்காகக் காத்திருந்த காலங்களும் "அது ஒரு காலம்!" என்று ஆகிவிடும்.

தந்தி, தபாலட்டை, ஏரோ-கிறாம் முதலியன தொடர்பு ஊடகத்தின் ஆரம்ப கால செயல்பாட்டில் முக்கிய பங்கு வகித்தவை.

வீட்டுக்கு வீடு தொலை பேசி இல்லாதிருந்த காலத்தில் தபாலகம் ஒன்றே ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ள இருந்த ஒரே வழி.

இன்றைய சந்ததிக்கு தந்தி என்றால் என்னவென்றே தெரியாது என்னும் அளவுக்கு அது காலாவதி ஆகி ஆயிற்று பல வருடங்கள். தொடர்பு சாதன வளர்ச்சி இல்லாதிருந்த காலத்தில் உடனடியாக ஒரு செய்தியை தூரத்தில் இருக்கும் ஒரு வருக்கு அறிவிக்க இந்தத் தந்தி சேவை பயன்பட்டது. உதாரணமாக ஒரு அவசர செய்தியை தூரத்தில் இருக்கும் ஒருவருக்கு அனுப்ப வேண்டி இருந்தால் அனுப்புனர் தனக்கருகில் இருக்கும் தபாலகம் சென்று மிகச் சுருக்கமாக அனுப்ப இருக்கும் செய்தியையும் பெறுனரின் முகவரியையும் தபால் அலுவலருக்குத் தெரிவிப்பார். தபால் அலுவலர் செய்தியைப் பெற்று சொற்களுக்கும் அனுப்பப்பட இருக்கும் இடத்துக்கும் (மைல் அளவு) ஏற்ற மாதிரியான கட்டணத்தினை அனுப்புனரிடம் இருந்து பெற்று பற்றுச்சீட்டை வழங்குவார்.

பின்னர் தபால் அலுவலர் அங்கிருந்து பெறுனரின் முகவரிக்கு அருகில் இருக்கும் தபாலகத்துக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு செய்தியையும் முகவரியையும் தெரிவிப்பார். அங்கிருக்கும் அலுவலர் அதனைப் பெற்று உடனடியாக அந்தப் பெறுனரின் முகவரிக்கு உரியவரை அனுப்பி செய்தியைக் கிடைக்கச் செய்வார். இதற்குச் சாதாரண தபால் கட்டணத்தை விட சற்று மேலதிகப் பணம் அறவிடப்படும். பொதுவாக திருமணவாழ்த்துச் செய்திகள், பாராட்டுச் செய்திகள், ஏதேனும் ஒன்றின் முடிவுகள் குறிப்பாக மரண செய்திகள் இவ்வகையில் முக்கிய இடம் வகித்தன.




ஆனால் நான் குறிப்பாகச் சொல்ல வந்த விடயம் தபாலட்டை பற்றியது. தந்தி இப்போது வழக்கொழிந்து போய் விட்டதென்றால் தபாலட்டை வழக்கொழியும் தறுவாயில் இருக்கிறது என்றே தோன்றுகிறது.

ஒரு நாட்டுக்குரிய வரலாறை, அழகை, தனித்துவத்தை, இயல்பை, கலைத்துவத்தை ஒரு புறத்தே படங்களாகக் கொண்டிருக்கிற தபாலட்டைகள் ஒரு விதம். அவை இன்றும் இருக்கின்றன. இனியும் இருக்கும் என்றே தோன்றுகிறது. நான் சொல்ல வருவது அதுவுமல்ல.

இந்தத் தபாலட்டைகள் பகிரங்கமாகச் செய்தியைக் காவிச் செல்லும். உள்ளூருக்குள் உலா வருபவை. குறிப்பிட்ட விலைக்கு அவற்றைத் தபாலகங்களில் பெற்றுக் கொள்ளலாம். வெள்ளை நிற மட்டை - அதன் மறு புறம் முகவரி எழுதுவதற்கான இடம் ஒரு புறமும் மேலும் செய்தி எழுதுவதற்கான இடம் மறுபாதியுமாக இருக்கும். அவற்றுக்கு முத்திரை ஒட்ட வேண்டியதில்லை. அதனை கொள்வனவு செய்யும் போதே முத்திரைக்கான பணமும் செலுத்தப்பட்டு விடும். ஆனால் காலப் போக்கில் அச்சடிக்கப்பட்ட தபாலட்டைகள் விற்பனை செய்து முடிவதற்கிடையில் அதன் பெறுமதி அதிகரித்து விடுவதால் மேலதிக முத்திரை ஒட்டி அனுப்பும் நிலைமையும் பின்னர் இருந்தது.

குறிப்பாக வானொலியில் பாடல்களை விரும்பிக் கேட்பதற்கு, போட்டி நிகழ்ச்சிகளுக்கான வினாக்களுக்கு விடை அளிப்பதற்கு, (குறிப்பாகப் போட்டி வைப்போர் இலகுவாகக் கணக்கிடவும், கண்டு கொள்ளவும், சேகரித்து வைக்கவும், நேர மிச்சத்துக்காகவும், சகாய விலை காரணமாகவும் இவை பெரிதும் வரவேற்கப் பட்டன பயன்பட்டன.) அந்தரங்கமற்ற விடயங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு, மேலும் எல்லோரும் பார்க்கலாம் என்று எண்ணுகின்ற விடயங்களை குறைந்த செலவில் பரிமாறிக்கொள்வதற்கும் இவை நன்கு பயன்பட்டன.


இப்போது இ-மெயில், S.M.S என்றும் தொலைபேசி என்றும் ஸ்கைப் என்றும் பல சாதனங்கள் வந்து விட்டதாலும் சமூக வலைத்தளங்கள் பெருகி விட்டதாலும் பாரம்பரியத் தபால்களின் பண்பாட்டுப் பெறுமதி கால வெள்ளத்தோடு கரைந்து போகிறது. பழையன கழிதலும் புதியன புகுதலுமாய் வாழ்வும் நகர்கிறது.

# எம்.ஜி.ஆரின் எதிர்பார்ப்பு...

தன் படங்களில் இடம் பெறும் பாடல்கள் விஷயத்தில், அதிக அக்கறையும், சிரத்தையும் எடுத்துக் கொள்வார் எம்.ஜி.ஆர். தான் எதிர்பார்க்கும் விதத்தில், மெட்டு வரும் வரையில் இசையமைப்பாளர்களை ஓய விடமாட்டார். தான் நடிக்கும் படப் பாடல்களின் மெட்டுக்கள் மட்டுமின்றி, பாடல் வரிகளும் மிக சிறப்பாக இருக்க வேண்டும் என்பதில், எம்.ஜி.ஆர். அதிக சிரத்தை எடுத்துக் கொள்வார்.

எவ்வளவு பெரிய கவிஞராக இருந்தாலும், எம்.ஜி.ஆர். போதும் என்று சொல்லும் வரை, அவர் எதிர்பார்ப்புக்கு ஏற்ப, பாடல் வரிகளை அடித்துத் திருத்தி எழுதிக் கொண்டே இருக்க வேண்டும். எம்.ஜி.ஆர். படங்களுக்கு மெட்டுப் போடுவதில் இருந்து, பாடல் எழுதுவது வரை, இசையமைப்பாளர்கள் மற்றும் பாடலாசிரியர்களுக்கு மிகுந்த பொறுமையும், சகிப்புத்தன்மையும் அவசியமாக இருந்தது. அந்த அளவுக்கு, எம்.ஜி.ஆர். கசக்கிப் பிழிந்து விடுவார்.

அளவுக்கு அதிகமான எம்.ஜி.ஆரின் தலையீடும், சிரத்தையும் தான், மற்ற நடிகர்களின் பழைய பாடல்களை விட எம்.ஜி.ஆரின் பழைய பாடல்கள், இன்றைய இளைஞன் முதல் முதியவர்கள் வரை ஆர்வத்துடன் விரும்பிக் கேட்பதற்கு அடிப்படை காரணங்களாக அமைந்தன என்றால், அது மிகையல்ல. எம்.ஜி.ஆர். இரட்டை வேடத்தில் நடித்த படம், நினைத்ததை முடிப்பவன்.



இந்தப்படத்தில், எம்.ஜி.ஆர்., கொள்ளைக் கூட்டத்தின் மத்தியில், அவர்களை வேவு பார்க்க வந்து, மாறு வேடத்தில் நின்று கொண்டிருக்கும் பொலிஸ்காரர்கள் மத்தியில் பாடுவதாக ஒரு பாடல் காட்சி.

அருமையான ஒரு மெட்டமைத்து, எம்.ஜி.ஆரிடம் பாடிக் காட்டினார் எம்.எஸ்.வி., அந்த மெட்டு எம்.ஜி.ஆருக்கு மிகவும் பிடித்துப் போயிற்று.

ஒரு பிரபலமான கவிஞரை, அந்த மெட்டுக்கு பாடல் எழுதச் சொன்னார் எம்.ஜி.ஆர்., காட்சிச் சூழலை நன்கு கேட்டு, தெரிந்த கொண்ட அந்த கவிஞர், பாடல் எழுதி முடித்ததும், எம்.ஜி.ஆரிடம் படித்துக் காண்பித்தார்.

பாடல் வரிகள் நன்றாக இருந்தும், எம்.ஜி.ஆரின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப அந்த வரிகள் அமையாததால், மீண்டும் புதிதாக சில பல்லவிகளையும், சரணங்களையும் எழுதச் சொன்னார்.

ஆனாலும் எம்.ஜி.ஆர். முகத்தில் திருப்தி இல்லை. வேறு ஒரு பிரபல கவிஞரை அழைத்து, இதே மெட்டுக்கு எழுத வைத்தனர்.

அந்தப் பாடலும் திருப்தி இல்லை. இதே போல், அந்த நாளில் பிரபலமாக இருந்த ஆறு கவிஞர்கள், அந்த மெட்டுக்கு பாடல் எழுதப் பணிக்கப்பட்டனர். எந்த வரிகளுமே எம்.ஜி.ஆரை வசீகரிக்கவில்லை.

கடைசியில், ஒரு மூத்த கவிஞரை கூப்பிட்டு எழுதச் செய்தனர். பாடல் வரிகளை கேட்ட எம்.ஜி.ஆர். முகத்தில், பூரண சந்திரனாக புன்னகை பொங்கி வழிந்தது... "இது தான். இதே தான். நான் எதிர்பார்த்தது..." என்றார் எம்.ஜி.ஆர். உடனே பாடல் ஒலிப்பதிவுக்கு ஏற்பாடு செய்யுங்கள் என்றார் எம்.ஜி.ஆர்., உற்சாகம் பொங்க. அந்தப் பாடல் இது தான்...

கண்ணை நம்பாதே உன்னை ஏமாற்றும்
உன்னை ஏமாற்றும் நீ காணும் தோற்றம்
உண்மை இல்லாதது...
அறிவை நீ நம்பு! உள்ளம் தெளிவாகும்
அடையாளம் காட்டும்
பொய்யே சொல்லாதது...

எம்.ஜி.ஆரின் எதிர்பார்ப்பை, பாடலில் கொண்டு வந்த அந்தப் பாடலாசிரியர் கவிஞர் மருதகாசி.




இரவுப் பொழுதைக் கழிப்பதற்காக ஒரு முதிய துறவியும், ஓர் இளைய துறவியும் அந்தக் கோயில் மண்டபத்தில் தங்கியிருந்தனர்.

இருவருக்கிடையேயும் ஓர் இனந்தெரியாத ஒட்டுதல் ஏற்பட்டது.

"என் மகளுக்குத் திருமணம் செய்து வைக்க முடியவில்லை. அதற்குக் கூடத் திராணியில்லாதவன் ஆகிவிட்டேன். எனக்கெல்லாம் எதுக்கு குடும்பம்? அதனால் துறவியாகிவிட்டேன்" என்றார் முதிய துறவி.

"நான் ஓர் அனாதை. என்னைக் கவனிக்க யாருமில்லை. கல்யாணம் செய்து வைக்க யாருமில்லை. இல்லற வாழ்க்கையே இல்லாமல் போய்விட்டபோது எனக்கெதுக்கு இல்லற வாழ்க்கை. அதனால் துறவியாகிவிட்டேன்" என்றார் இளைய துறவி.


மறுநாள் விடிந்ததும் இருவரும் துறவறத்திலிருந்து விடுபட்டுவிட்டனர். முதிய துறவி மாமனாராகிவிட்டார். இளைய துறவி அவருக்கு மருமகனாகிவிட்டார்.

# வாசனைப் பிரபலங்கள்!

சென்ற் எனப்படுகின்ற வாசனைத் தைலங்களை விற்பது எளிதல்ல. அதுவும் பிரபலமான நிறுவனங்களின் சென்ற்களை அதிக விலைக்கு விற்க வேண்டுமானால் பிரபலங்களை நாட வேண்டும். ஆண்டுதோறும் 1,000 புது சென்ற்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றனவாம்! இவற்றின் மூலம் கிடைக்கும் மொத்த வருமானம் 5.3 பில்லியன் டொலர்! இதில் பிரபலங்களின் மூலம் அறிமுகப்படுத்தப்படும் சென்ற்களின் வருமானம் மட்டும் 215 மில்லியன் டொலர்.

- ஒரு பிரெஞ்ச் சென்ற் நிறுவனம் 2002ஆம் ஆண்டு நடிகர் அமிதாப் பச்சன் பெயரில் ஒரு வாசனைத் தைலத்தை அறிமுகப்படுத்தியது. இந்தியாதான் பெரிய சந்தை என்பது காரணம்.
- ஸீனி ஓர்தெஸ் என்ற நிறுவனம் ஒரு புதிய சென்ட்டை “டைகர்” என்ற பெயரில் ஷாருக்கான் முகத்துடன் வெளிக்கொணர்ந்தது.
- லதாமங்கேஷ்கரை வைத்து 1999இல் LATA EAU DE PARFUM என்ற பெயரில் ஒரு சென்ற் விற்பனைக்கு வந்தது.
- 1987இல் பிரபல ஹொலிவுட் நடிகை எலிசெபத் டெய்லரை வைத்து 10 வெவ்வேறு சென்ற்கள் வெளிவந்தன. இவர் அறிமுகப்படுத்திய WHITE DIAMONDS சென்ற்தான், பிரபலங்கள் அறிமுகப்படுத்திய வாசனைத் தைலங்களில் மிக அதிகம் விற்பது.
- பிரபல பொப் பாடகி லேடி ககா 2010இல் அறிமுகப்படுத்திய சென்ற் FAME. இதன் வாசனை இரத்தத்தை நினைவுபடுத்துமாம்.
- இவர்களைத் தவிர ஜூலியா றொபேர்ட்ஸ், பிரிட்னி ஸ்பியர்ஸ், டேவிட் பெகாம், பாரிஸ் ஹில்டன் ஆகியோரும் சென்ற் அறிமுகத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
- இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் எம்.எஸ். தோனியும் 2012இல் ஒரு டியோடெரென்ட்டை அறிமுகப்படுத்தியுள்ளார். துபாயில் அறிமுகப்படுத்தப்பட்டது இந்த “7” சென்ற்.














# உலகின் கவர்ச்சிகர பிரபலம்?



இங்கிலாந்திலிருந்து வெளியாகும் maxim என்ற பத்திரிகை, “உலகின் கவர்ச்சிகரமான பிரபலம் யார்?” என்ற ஆய்வை நடத்தியது. இதில், அதிக வாக்குகளைப் பெற்று, பிரபல ஹொலிவுட் நடிகை மைலே சைரஸ், முதலிடத்தை பிடித்துள்ளார்.

முதலிடத்தை பிடித்த சைரசை விட, இரண்டாம் இடத்தை பிடித்த செலினா கோமேஸ் பற்றித் தான், ஹொலிவுட்டில் பரபரப்பாக பேசப்படுகிறது. இதே பத்திரிகை கடந்தாண்டு நடத்திய கருத்துக் கணிப்பில், பிரபல நடிகைகளான ஜெனீபர் லோரன்ஸ், எம்மா ஆகியோரை விட, செலினா மிகவும் பின்தங்கியிருந்தார். இந்தாண்டில், அவர்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, இரண்டாம் இடத்தை செலினா பிடித்திருப்பதே சர்ச்சைக்கு காரணமாகியிருக்கிறது. இதை ஜீரணிக்க முடியாமல் ஜெனீபர், எம்மா ஆகியோர் போர்க்கொடி தூக்கியிருக்கின்றனர்.

# ஜப்பானியரின் புது நாகரிகம்!

ஜப்பானில் உள்ள இளைஞர்கள் மற்றும் சிறுவர்களிடையே, ஒரு புதுவித நாகரிகம் (Fashion) உருவாகியுள்ளது. பொது இடங்களுக்கும், முக்கிய நிகழ்ச்சிகளுக்கும் செல்லும்போது, முகத்தின் மீது, உள்ளாடைகளை முகமூடி போல் அணிந்து செல்வது தான், அந்த ஃபாஷன்.

ஜப்பானில் பிரபலமான கற்பனை கார்ட்டுன் கதாபாத்திரம், இதுபோன்ற முகமூடியை அணிந்து வருகிற தாம். அந்த கதாபாத்திரத்தின் “ஸ்டைல்” தான் தற்போது ஜப்பானியர்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இளைஞர்கள், சிறுவர்களைப் பார்த்து, வயதானவர்களும் இப்போது இது போன்ற உள்ளாடை முகமூடியை அணியத் துவங்கியுள்ளனர்.




அம்மா, அப்பா இரண்டு பேரும் வேலைக்குப் போகும் இந்தக் காலத்தில் உதவிக்கு நிற்பவரிடம் குழந்தையை விட்டு விட்டுப் போகும் பெற்றோர்கள், அவரிடம் குழந்தையிடம் எப்படிப் பேசுவது, என்று ஒரு சில அடிப்படை விஷயங்களையாவது சொல்லிக் கொடுப்பது நல்லது. நினைவிருக்கட்டும். ஒரு நாளின் முக்கால்வாசி நேரத்தை உங்கள் குழந்தை அவருடனே கழிக்கிறது.

# சாதா குழந்தை To சூப்பர் குழந்தை

**- டாக்டர்.பிரகாஷ் -**

10



குழந்தைகளுக்குத் தொடர்பாடல் திறனை வளர்க்கையில் ஒரு மிக முக்கியமான விஷயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும்.

குழந்தைகள் எந்த விஷயத்தை செய்ய வேண்டும் என்று நாம் நினைக்கிறோமோ, அந்த விஷயத்தை மட்டுமே அவர்களிடம் சொல்ல வேண்டும்.

அவர்கள் அதை செய்யக் கூடாது என்று நாம் நினைக்கிறோமோ, அதை சொல்லக் கூடாது.

நாம் சொல்லும் எந்த ஒரு விஷயமும் குழந்தையின் மூளையில் படமாகப் பார்க்கப்படும். குழந்தையின் எதிர்வினையும் அது காணும் அந்தப் படத்தைப் பொறுத்தே அமைகிறது.

விடுமுறைக்கு எங்கள் ஊருக்கு வந்திருந்த என் உறவுக்காரக் குழந்தைகள் செந்தில், சங்கர் (இருவருமே பத்து வயதுக்குட்பட்டவர்கள்) வீட்டின் பின்புறமிருக்கும் புளிய மரத்தின் மீது ஏறி விளையாடிக் கொண்டிருந்தார்கள். இதைப் பார்த்து, எங்கே அவர்கள் விழுந்து விடுவார்களோ என்று பயந்து போன அவர்களின் பெற்றோர் சத்தமிட்டனர்.

சங்கரின் அம்மா ஓடி வந்து “சங்கர், கீழ விழுந்திடாத!, கீழ விழுந்திடாத!” என்று பலமாக சத்தமிட்டார். சில விநாடிகளில், சங்கர் கீழே விழுந்தான். அதே நேரத்தில் இன்னொரு மரக்கிளையில் தொங்கிக் கொண்டிருந்த செந்திலைப் பார்த்து, அவனது அம்மா, “செந்தில், கெட்டியாப் பிடித்துக்கொள், நல்லா கெட்டியாப் பிடித்துக்கொள்” என்று பலமாக சொன்னார். மரக்கிளையை கெட்டியாக பிடித்துக் கொண்டு, விழாமல் தொங்கிக் கொண்டிருந்த செந்திலை மெதுவாகக் கீழே இறக்கி விட்டோம்.

சங்கரின் அம்மா, அவனிடம் “கீழ விழுந்திடாத” என்று சொன்னவுடன், சங்கரின் மூளை கீழே விழும் அந்தக் காட்சியைத் தான் முதலில் கண்டது. பின்பு, கீழே விழாமல் இருக்கும் காட்சியை அதனால் கற்பனை செய்ய இயலவில்லை. குழந்தை கீழே விழுந்தான். மாறாக, செந்திலின் அம்மா, அவனை, “நல்லா, கெட்டியாப் பிடித்துக்கொள்” என்று கட்டளையிட்டவுடன், செந்திலின் மூளையில், மரக் கிளையை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு இருக்கும் காட்சி தோன்றி, அவ்வாறே அது செயல் படுத்தியது.

குழந்தைகளின் மூளை கமெரா மெமரி போல - தான் பார்ப்பதை, நினைப்பதை, படங்களாக நினைவு படுத்திக் கொள்ளும். மேலும், எதிர்மறைக் கட்டளை பெற்ற அந்தப் பிஞ்சு மூளைக்கு, கீழே விழுவதைத் தான் முதலில் கற்பனை செய்து பார்க்கத் தெரிந்ததே அன்றி, அது நிகழாமல் சரி செய்வது எப்படி என்று தெரியவில்லை.

இந்த சம்பவத்தில் இருந்து நமக்குத் தெரிவது என்னவென்றால், குழந்தைக்கு எப்போதும் பொசிட்டிவ் கட்டளைகளை மட்டுமே தரவேண்டும். எதிர்மறைக் கட்டளைகளைக் கொடுத்தால் எதை நாம் செய்யக் கூடாதென்று சொல்கிறோமோ, அதையே அவர்கள் செய்வார்கள். கையை வாயில் வைக்காதே, என்று சொல்வதை விட கையை சேர்த்து வைத்துக் கொள், கையை நேரா கீழ வை போன்ற நேர்மறை வாக்கியங்கள் அவன் கையை வாயில் வைப்பதைத் தடுக்கும்.

நம்ம ஊர் அரசியல்வாதிகளைப் போல இதுதான் சான்ஸ் என்று குழந்தைகளிடம் ஒரேயடியாகப் பேசிக் கொண்டே இருந்து அவர்களை போர் அடிக்க வேண்டாம். அவர்கள், மௌனமாக இருந்து, சுற்றுப் புற விஷயங்களை கவனித்து கிரகிக்கவும் கொஞ்சம் அவகாசம் கொடுக்கவும்.

(தொடரும்)

# சினிமா 100 : ஏதைக் கொண்டாட?

ஞாநி —— கட்டுரையிலிருந்து

**தமிழில் திறமையான நடிகர்கள், நடிகைகள், ஒளிப்பதிவாளர்கள், இசையமைப்பாளர்கள், பாடலாசிரியர்கள், எடிட்டர்கள், இயக்குநர்கள் இருக்கிறார்கள். ஒரு படத்தில் இத்தனை திறமையாளர்களும் ஒன்று சேர்ந்து எப்படி மோசமான படைப்பை உருவாக்குகிறார்கள் என்றுதான் புரியவில்லை.**

*சினிமா ஒன்றுதான் தனக்கு முன்பு வரை இருந்த அத்தனை கலைகளையும் அத்தனை அறிவியல் கோட்பாடுகளையும் இணைத்துப் பயன்படுத்தி உருவான வடிவம். கமரா முதல் கணினி கிராபிக்ஸ், டிஜிட் டல் ப்ரொஜெக்ஷன் வரை அதில் அறிவியலின் எல்லா பழைய, புதிய கோட்பாடுகளும் செயற்படுகின்றன. இசை முதல் இலக்கியம் வரை கதக் முதல் களரி வரை அத்தனை கலையம்சங்களும் பயன்படுத்தப்படுகின்றன. அதனால்தான் வேறு எந்த ஒற்றை கலை வடிவத்தையும் விட எளிதாக எல்லோரையும் தன் பக்கம் கவர்ந்திழுக்கும் வலிமையும் செல்வாக்கும் சினிமா வடிவத்துக்கு இருக்கிறது.*

**இந்திய** சினிமா தோன்றி 100 வருடங்கள். தாதா சாகிப் பால்கே 1913இல் ராஜா ஹரிச்சந்திரா என்ற பேசாத படத்தை உருவாக்கியதே முதல் படமாகக் கருதப்படுகிறது.

தமிழ்நாட்டில் முதல் பேசாத படத்தை உருவாக்கிய நிகழ்வு 1917-18இல் நடராஜ முதலியாரால் நடாத்தப்பட்டது. அவர் தன் உறவினரான நாடகாசிரியர் பம்மல் சம்பந்த முதலியாரின் யோசனையைக் கேட்டு கீசக வதம் கதையைப் படமாக்கினார்.

நூறாண்டுகளுக்கு முன்னால் முதல் சினிமா இந்தியாவில் உருவானபோது இன்னொரு வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்ச்சியும் நடைபெற்றது. உலக அளவில் சிறந்த இலக்கியத்துக்கான நோபல் பரிசு கவி ரவீந்திரநாத் தாகூருக்கு அறிவிக்கப்பட்டது அந்த ஆண்டுதான். தாகூருக்கு அப்போது அளிக்கப்பட்ட பரிசுத்தொகையின் அளவு அன்றைய சுமார் இரண்டு இலட்சம் ரூபாய். பால்கே தன் முதல் படத்தை அன்று தயாரிக்க ஆன செலவு 15 ஆயிரம் ரூபாய்!

இந்திய இலக்கியம் உலக உச்ச அங்கீகாரத்தை எட்டிய நேரத்தில்தான் சினிமா குழந்தை தவழ ஆரம்பித்தது. நூறு வருடங்கள் கழித்து இந்தியாவில் வருடந்தோறும் சுமார் 1500 படங்கள் தயாரிக்கப்படுகின்றன. மிக சிறிய படத்தின் சராசரித் தயாரிப்புச் செலவு ஒரு கோடி ரூபாய். இந்தியாவின் உச்சமான இலக்கிய விருதான ஞானபீட விருதில் பரிசுத் தொகையாக அளிக்கப்படுவது ஏழு இலட்சம் ரூபாய். பத்து கோடி செலவில் தயாரிக்கப்படும் படத்தில் கூட கதாசிரியர் எழுத்தாளருக்கு ஏழு இலட்ச ரூபாய் கிடைப்பது அரிது. இன்று நோபல் பரிசின் அளவு சராசரி தமிழ் சினிமா பட்ஜெட் அளவுதான்: ஆறு கோடி ரூபாய்!

மனிதன் நாகரிகமடைந்து உருவாக்கிய படைப்புகளிலேயே உன்னதமான கலைப் படைப்பு சினிமா வடிவம்தான். சினிமா கண்டுபிடிக்கப்படுவதற்கு பல காலம் முன்பிருந்தே இசை, ஓவியம் சிற்பம், கவிதை, இலக்கியம், நடனம் எனப் பல வடிவங்கள் மனிதனால் உருவாக்கப்பட்டு மனித மனதை மகிழ்விக்கவும் வளப்படுத்தவும் பலப்படுத்தவும் பயன்பட்டு வந்திருக்கின்றன. அறிவியலின் பல பிரிவுகளான இயற்பியல், வேதியியல், கணிதம் என்று ஒவ்வொன்றிலும் புதுப்புது கோட்பாடுகள் உருவாக்கப்பட்டு அவை மனித வாழ்க்கையில் அன்றாடம் பயன்படும் பொருட்களை உதவிகரமான அமைப்புகளை ஏற்படுத்த பயன்பட்டிருக்கின்றன.

சினிமா ஒன்றுதான் தனக்கு முன்பு வரை இருந்த அத்தனை கலைகளையும் அத்தனை அறிவியல் கோட்பாடுகளையும் இணைத்துப் பயன்படுத்தி உருவான வடிவம். கமரா முதல் கணனி கிராபிக்ஸ், டிஜிட்டல் ப்ரொஜெக்ஷன் வரை அதில் அறிவியலின எல்லா பழைய, புதிய கோட்பாடுகளும் செயற்படுகின்றன. இசை முதல் இலக்கியம் வரை கதக் முதல களரி வரை அத்தனை கலையம்சங்களும் பயன்படுததப் படுகின்றன. அதனால்தான் வேறு எந்த ஒற்றை கலை வடிவத்தையும் விட எளிதாக எல்லோரையும் தன் பக்கம் கவர்ந்திழுக்கும் வலிமையும் செல்வாக்கும் சினிமா வடிவத்துக்கு இருக்கிறது.

கலையம்சமோ அறிவியல் அம்சமோ எல்லா அம்சங்களுக்கும் தன்னுள் தேவை இருக்கும் வடிவமாக சினிமா இருக்கிறது.

ஆரம்ப நாட்களில் சினிமா பார்க்க மக்கள் எளிதில் முன்வரவில்லை. பயந்தார்கள். அருவெறுத்தார்கள். அவர்களை ஈர்க்க பத்துப் பதினைந்து நிமிடத் துண்டுப் படங்களுக்கு முன்னும் பின்னுமாக நடன நிகழ்ச்சிகள், சர்க்கஸ் காட்சிகள், சொற்பொழிவுகள் எனப் பலவற்றைக் கதம்பமாகக் கொடுத்து வரவழைத்தார்கள். விடிய விடிய கூத்துப் பார்த்த மக்களுக்கு பத்து நிமிடக் குறும்படம் போதாது என்று மூன்று மணி நேரப் படங்களைத் தயாரிக்க ஆரம்பித்தார்கள். இதை வைத்துப்பணம் திரட்ட முடியுமா என்று ஆரம்பத்தில் கவலைக்குரியதாக இருந்த வடிவம், இன்று பிரமாண்டமாக பணம் திரட்டும் வர்த்தகமாகி விட்டது.

உலகம் முழுவதும் சினிமா ஒரு பிரமாண்டமான வணிகம்தான். ஆனால் 25 வருட வரலாறு, பொன் விழா வரலாறு, நூற்றாண்டு வரலாறு என்று கொண்டாடும்போது அதன் வணிக வெற்றியை யாரும் கொண்டாடுவதில்லை, படைப்புரீதியான வடிவ வெற்றியில் அடைந்த மைல் கற்களையே நினைத்துப் பார்க்கிறார்கள். தியாகராஜ பாகவதரின் ஹரிதாஸ் இரு வருடங்கள் தொடர்ந்து கொட்டகையில் காட்டப்பட்டதை வரலாற்றுக் குறிப்பாக எழுதலாம். ஆனால் தமிழின் சிறந்த 100 படங்களில் கூட ஒன்றாக ஒரு போதும் அது இடம் பெறவே பெறாது.

உலகம் முழுவதும் வணிக சினிமா ஆதிக்கம் செலுத்தினாலும், சிறந்த படங்கள் என்று தரப்படுத்தும்போது பட்டியலிடும்போது படங்களின் வணிக வெற்றிக்கோ தோல்விக்கோ இடமில்லை.




ஒரு படைப்பாக அதன் வடிவ மொழியில், அதன் கலையம்சங்களில், அதன் அறிவியல் உத்திகளில், அது முன்வைக்கும் மதிப்பீடுகளில் எந்த தரத்தை எட்டுகிறது, இவற்றின் வழியே ஒட்டு மொத்தமாக பார்வையாளருக்கு எத்தகைய மேன்மையான அனுபவத்தை தருகிறது என்ற அடிப்படையிலேயே படங்கள் சிறந்த படமாகக் கருதப்படுகின்றன.

இன்று உலக அரங்கில் இந்திய சினிமாவின் சிறந்த பங்களிப்புகளைக் கொடுத்த சினிமா மேதைகளாகப் பார்க்கப்படுவோர் யாரும் வணிக சினிமாவின் அங்கங்களாக இருப்போர் அல்ல. வணிக சினிமாவிலிருந்தும் பலர் கொண்டாடப்படுவதற்கு உரியவர்கள்தான். கொண்டாடப்படுவார்கள். அது அவர்கள் அந்த எல்லைக்குள்ளே நின்று அதன் அதிகபட்ச உச்சங்களை அடைந்ததற்காக மட்டும்தான்.

இப்படிப் பார்க்கும்போது இந்திய சினிமாவில் ஒட்டு மொத்த சினிமா மொழியில் சிறந்த தரத்தை எட்டியவராக சத்யஜித் ரே எப்போதும் கொண்டாடப்படுகிறார். அவரையடுத்து அதே வழிமுறையில் வந்தவர்களாகவும் தத்தம் பங்களிப்புகளை வித்யாசமாக அளித்தவர்களாகவும் மிருணாள் சென், அடூர்




கோபாலகிருஷ்ணன், அரவிந்தன், ஷ்யாம் பெனகல், மணி கவுல், கௌதம் கோஷ், கிரீஷ் காசரவள்ளி, புத்ததேவ் தாஸ்குப்தா, அபர்ணா சென் என்று நீண்ட பட்டியலாகப் பல படைப்பாளிகள் உள்ளனர். வணிக இந்தி சினிமாவின் சாதனையாளர்களாக, ராஜ்கபூர், சாந்தாராம், குரு தத் தொடங்கிப் பலர் இருக்கின்றனர்.

இதே போல தமிழில் பார்க்கும்போது நம்மிடம் வணிக சினிமாவின் எல்லைகளுக்குள் நின்று சாதனை செய்தவர்கள் பட்டியலை மட்டுமே போட முடிகிறது. ஏழை படும் பாடு படத்தை எடுத்த ராம்நாத் முதல், ஸ்ரீதர், பீம்சிங், பாலசந்தர், பாரதிராஜா, ருத்ரய்யா, மகேந்திரன், பாலு மகேந்திரா, பாலா, வசந்தபாலன், ராதாமோகன், பாலாஜி சக்திவேல் என்று நாம் நமது ரசனைத் தேர்வுப்படி என்ன பட்டியல் போட்டாலும், அவர்களெல்லாம் வணிக சினிமாவின் வடிவ மொழிச் சட்டகத்துக்குள்ளேயே இயங்கி அந்த வடிவம் சார்ந்த வெற்றியை மட்டுமே கண்டவர்கள்தான் என்பதே அப்பட்டமான உண்மை.

சத்யஜித் ரேவும் சென்னும், பெனகலும் செய்து பார்த்த சினிமாவுக்கு நிகரானதாகச் சொல்ல தமிழில் நமக்கு எதுவும் இல்லை. அந்த திசையிலான முயற்சிகளாக நடந்த ஒரு சில உண்டு. ஜெயகாந்தனின் உன்னைப் போல் ஒருவன், பாபு நந்தன் கோடின் தாகம், சிங்கீதத்தின் திக்கற்ற பார்வதி, ஜெயபாரதியின் குடிசை, அம்'ன் குமாரின் ஒருத்தி எல்லாமே அந்த திசையில் மிக பலவீனமாகத் தோற்றுப் போன முயற்சிகள்தான். வணிகத்திலும் வடிவத்திலும் தோற்றவை.

மறைந்த நண்பரும் சினிமா விமர்சகர்-ஆய்வாளருமான அறந்தை நாராயணன் ஒருமுறை எழுதியது போல தமிழில் திறமையான நடிகர்கள், நடிகைகள், ஒளிப்பதிவாளர்கள், இசையமைப்பாளர்கள், பாடலாசிரியர்கள், எடிட்டர்கள், இயக்குநர்கள் இருக்கிறார்கள். ஒரு படத்தில் இத்தனை திறமையாளர்களும் ஒன்று சேர்ந்து எப்படி மோசமான படைப்பை உருவாக்குகிறார்கள் என்றுதான் புரியவில்லை என்று அவர் அங்கலாய்த்திருப்பார்.

உண்மைதான். இங்கே திரைப்படத் துறையின் ஒவ்வொரு பிரிவிலும் திறமையானவர்களுக்கு பஞ்சமே இல்லை. ஆனால் கூட்டாக ஒரு தரமான படைப்பை உருவாக்கத் தடையாக இருப்பவை என்னென்ன என்றே நாம் யோசிக்கவேண்டும்.

# முல்லை வைத்தியசாலைக்கு வடமாகாண ஆளுநர் விஜயம்



(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி அண்மையில் விஜயம் மேற்கொண்டு ஆய்வுகளை மேற்கொண்டார்.

இதன்போது வைத்திய சாலையில் காணப்படும் ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர்களின் தேவைகள் தொடர்பாக கலந்துரையாடினார். அத்துடன் வைத்தியர்கள், தாதியர்கள் ஆகியோரின் விடுதிகள் தொடர்பாகவும் அவர்களின் போக்குவரத்து வசதிகள் தொடர்பாகவும் ஆராயப் பட்டது. புதிதாக அமைக்கப் பட்ட விடுதிகளுக்கு வேண்டிய தளபாடங்களை உடனடியாக பெற்றுக்கொடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளை ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

# கோவில் உண்டியல் உடைத்து பெருமளவு பணம் கொள்ளை

(நெடுங்கேணி)
நெடுங்கேணி பிரதேசத்தில் உள்ள அருள் மிகு ஐயனார் ஆலயத்தின் திருப்பணி உண்டியல் கடந்தவெள்ளிக்கிழமை நள்ளிரவு உடைத்து பணம் களவாடப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது நெடுங்கேணி நொச்சியடி ஐயனார் ஆலயத்தின் திருப்பணி உண்டியல் குறித்த தினத்தைதன்று நளிரவு வேளையில் திருடர் குழு கோவிலுக்குள் உள்நுழைந்து பணப்பெட்டகக்கதவை வால் பிளேற்றால் அறுத்து வாகனத்தில் ஏற்றி செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இதில் 65000 ரூபாவிற்கு மேற்பட்ட பணம் இருந்ததாக ஆலயபரிபாலன சபை தெரிவித்துள்ளது. (40)

# நடு நிலைமையின் சின்னம் செஞ்சிலுவை

ஹென்றி டுனான்ற் என்பவரால் உருவாக்கப் பட்ட சின்னம் செஞ்சிலுவை தனது நாடாகிய சிவஸ் நாட்டின் தேசியக் கொடியின் சின்னமாகிய சிவப்புப் பின்னணியில் அமைந்த வெள்ளைச் சிலுவையை மாற்றி வெள்ளைப் பின்னணியில் சிவப்புச் சிலுவையாக்க உருவாக்கியதே செஞ்சிலுவையின் சின்னமாகும்.

1859ஆம் ஆண்டு சொல்பரினா என்ற இடத்தில் நடைபெற்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட போர் வீரர்களையும், பொதுமக்களையும் காப்பாற்றிய தொண்டர்களுக்கான அடையாள சின்னமாக இது உருவாக்கப்பட்டது. இது தொண்டர்களின் பாதுகாப்புக்கான செயற்படுவதற்கு உலக அங்கீகாரம் பெற்ற செஞ்சிலுவையாகும். இது காலாகாலமாக ஏற்படுத்தப்பட்ட பல இணைப்புகளுடன் இச்சின்னம் உலக அங்கீகாரத்தைப் பெற்றது.

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட இச்சின்னத்தை தனிப்பட்ட நிறுவனங்கள். வைத்திய சாலைகள்,மருத்துவர்கள் என்பன பயன்படுத்துகின்றன. இது அதன் நடுநிலமை கோட்பாடடுக்கு மாறானதாகும். உலக ரீதியில் அனர்த்த காலங்களில் செஞ்சிலுவைச்சின்னம் நடுநிலமையின் சின்னமாக அங்கீகரிக்கப்பட்டது.

ஜெனிவா கோட்பாட்டுக்கு அமைவாக மனிதாபிமானம், பாரபட்சமின்மை, நடுநிலைமை சுயாதீனம், தொண்டர்சேவை, ஒருமைப்பாடு, சர்வதேச மயம், என ஏழுகொள்கைகளுக்காக சர்வதேச ரீதியிலும் தேசிய ரீதியிலும், செயற்படும் செஞ்சிலுவை சங்கங்களினால் தான் இச்சின்னத்தைப் பயன்படுத்த முடியும். ஏனைய அமைப்புக்கள் பயன்படுத்துவது தவறானதாகும். இது செஞ்சிலுவைச் சங்கத்துக்கு உரித்தான செஞ்சிலுவையாகும்.

இவ் வகையில் அனர்த்த காலங்களிலும் ஏனைய காலங்களிலும் செயற்படும் ஜெனிவாவினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதாபிமான சேவையை செய்கின்ற இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினாலேயே இச்சின்னம் பயன்படுத்த முடியும். அதற்கு இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் அங்கீகாரம் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு உண்டு.

**செஞ்சிலுவைச் சின்னத்தை பாதுகாத்தல்.**

இலங்கையில் செஞ்சிலுவைச் சின்னம் தவறான முறையில் பாவிக்கப்படுகின்றது. செஞ்சிலுவைச் சங்க சின்னத்தை நடுநிலமையின் சின்னமாக உலகளவில் அங்கீகரிக்கப்பட்டது. இச் செஞ்சிலுவைச்சின்னத்தை பாவிப்பதன்முக்கிய நோக்கம் காயப்பட்டோருக்கும் துன்புறுத்தப்பட்டோருக்கும் உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பவர்களுக்கும், உதவுவதற்கும், பாதுகாப்பு அளிப்பதற்கும். உயிரையும் உபகரணங்களையும் காப்பாற்றுவதற்கு பணி புரியும். தொண்டர்களை அடையாளம் கண்டு கொள்வதற்கும் பயன்படுத்தப்படும் சின்னமாகும். மேலும் இக்காலங்களில் ஈடுபடும் செஞ்சிலுவைச்சங்க வைத்தியர்கள் பணியாளர்கள், தொண்டர்கள், வைத்திய உபகரணங்கள் நிவாணப் பொருட்கள் வழங்கும் தொணடர்களாலும் இச் சின்னம் பயன்படுத்தப்படும்.

எனவே இச்சின்னம் ஏனைய நிறுவன அமைப்புக்கள் பயன்படுத்தும் போது இதன் தனித்தன்மை நடுநிலமை, பாதுகாப்புத்தன்மை என்பன பாதிக்கப்படுகின்றது. எனவே இலங்கை சட்டவாக்கத்தின் படி இச் செஞ்சிலுவையை ஏனைய நிறுவனங்கள் பாவித்தல் செஞ்சிலுவைக்கொள்கைக்கு முரணானதாகும்.





ஏனைய அமைப்புக்களின் சின்னம் எப்படி அமைய வேண்டும் என்பதற்கு சர்வதேச ரீதியில் அங்கீகாரம் உண்டு மருத்துவர் சேவைக்காக அங்கீகரிக்கப்பட்ட சின்னங்கள், மருத்துவர்களின் சின்னங்கள் வெள்ளை நிறப்பின்னணியில் பச்சை சிலுவை அல்லது பச்சை பின்னணியில் வெள்ளை சிலுவை



வைத்தியசாலையின் சின்னமாக நீல நிற பின்னணியில் H என்ற வெண்ணிற எழுத்து செஞ்சிலுவைச்சின்னத்தை மருத்துவர்கள் பாவிப்பது செஞ்சிலுவைக்கு முரணானதாகும். எனவே ஏனைய நிறுவனங்களும் தனியார்களும் தங்களுக்குரிய சின்னங்களைப் பயன்படுத்தலாம்.

**செஞ்சிலுவைச் சின்னத்தை பயன்படுத்துவது தவறாகும்.**

முடிவாக நாம் கூறுவது செஞ்சிலுவைச் சின்னம் யுத்த அனர்த்த காலங்களில் நடுநிலமையுடன் செயற்படும் தொண்டர்கள் அவர்கள் பயன்படுத்தும் உபகரணங்களை காட்டும் செயற்பாட்டுச் சின்னமாகும். செஞ்சிலுவைச்சங்கத்தின் சின்னமானது இலங்கை சட்டவாக்க கழகத்தின் 2006 ஆண்டு 4ஆவது இலங்கை ஜெனிவாச் சட்டத்தின் படிபாதுகாக்கப்பட்டுள்ளது. இதனைத்தவறாகப் பயன்படுத்தும் ஏனைய தனியார் நிறுவனங்கள் இதனை தவிர்த்து செயற்படும்படி கேட்டுக் கொள்வதுடன் செஞ்சிலுவையை பயன்படுத்துவதை தவிர்த்துக் தங்களுக்காக உள்ள சின்னங்களை பயன்படுத்தி செஞ்சிலுவைச் சங்கத்தின் தனித்தன்மையை பாதுகாக்க உதவவும்.

**கு.பாலகிருஸ்ணன்**
*தலைவர்,*
*இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,*
*யாழ்ப்பாணம்.*



# 2013 - 2014 குரு பெயர்ச்சி பலன்கள்

## ரிஷபம்:



### மகம், பூரம், உத்திரம் 1-ஆம் பாதம்

துவங்கியதை முடிக்கும் வரை துவளாதவர் நீங்கள். குரு பகவான் 28.5.13 முதல் 12.6.14 வரை உங்கள் ராசிக்கு லாப வீடான 11இல் தொடர்கிறார். வெளிச்சத்துக்கு வருவீர்கள். தொட்டதெல்லாம் துலங்கும். பல மாதங்களாக கிடப்பில் கிடந்த வேலைகளையும் உற்சாகத்துடன் முடித்துக் காட்டுவீர்கள். அந்தஸ்து உயரும். தன்னிச்சையாக முடிவெடுப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிட்டும். சகோதரிக்குத் திருமணம் நிச்சயமாகும். புது பதவிகள், பொறுப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள்.

உங்கள் ராசிக்கு 7-ஆம் வீட்டைக் குரு பார்ப்பதால் சுறுசுறுப்பாவீர்கள். சவாலான வேலைகளையும் சர்வ சாதாரணமாக செய்து முடிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். புது வீடு கட்டி குடி புகுவீர்கள். எதிர்பார்த்து காத்திருந்த அயல்நாட்டு பயணம் சாதகமாக அமையும். உங்களின் 3-ஆம் வீட்டைக் குரு பார்ப்பதால், இளைய சகோதரர் வகையில் உதவிகள் கிடைக்கும். ஆடை - ஆபரணம் சேரும். வழக்கில் வெற்றி உண்டு. குரு 5-ஆம் வீட்டைப் பார்ப்பதால் புதிய சிந்தனைகள் தோன்றும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். மகளின் திருமணத்தை சிறப்பாக நடத்துவீர்கள். பூர்வீகச் சொத்தை புதுப்பிக்கும் முயற்சியில் இறங்குவீர்கள். குலதெய்வப் பிரார்த்தனை நிறைவேறும்.

**குருபகவானின் சஞ்சாரம்:** 28.5.13 முதல் 25.6.13 வரை உங்கள் சுக - பாக்யாதிபதியான செவ்வாயின் மிருகசீரிட நட்சத்திரத்தில் குரு செல்வதால், வீட்டை விரிவுபடுத்துவீர்கள். வங்கிக்கடன் கிடைக்கும். எதிர்பார்த்த விலைக்கு பழைய மனையை விற்பீர்கள். கடன் பிரச்சினை கட்டுக்குள் வரும். அரசாங்க விஷயம் நல்ல விதத்தில் முடியும்.

26.6.13 முதல் 28.8.13 வரை; 27.1.14 முதல் 12.4.14 வரையிலும் ராகுவின் திருவாதிரை நட்சத்திரத்தில் குரு செல்கிறார். பெரிய திட்டங்கள் நிறைவேறும். தைரியமாக முடிவுகள் எடுப்பீர்கள். வழக்கில் வெற்றி பெறுவீர்கள்.

29.8.13 முதல் 12.11.13 வரையிலும், உங்கள் பூர்வ புண்ணிய - அஷ்டமாதிபதியான குரு தன் நட்சத்திரமான புனர்பூசத்தில் செல்வதால், பண வரவு உண்டு. சொத்து வாங்குவது - விற்பது லாபமாக முடியும். கர்ப்பிணிகள் படிகளில் ஏறுவது - இறங்குவதோ, கடினப் பொருட்களைத் தூக்குவதோ கூடாது. பூர்வீகச் சொத்துப் பிரச்சினை வெடிக்கும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. கடன் தீர புது வழி கிடைக்கும்.

13.11.13 முதல் 26.1.14 வரை குரு, புனர்பூச நட்சத்திரத்திலும் 27.1.14 முதல் 11.3.14 வரை திருவாதிரையிலும் வக்ரகதியில் செல்கிறார். எவருக்கும் உறுதிமொழி தர வேண்டாம். மற்றவர்கள் விவகாரத்தில் தலையிடாதீர்கள். காய்ச்சல், சிறுநீரக தொந்தரவு வந்துசெல்லும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

வியாபாரத்தில், புதிய முதலீடுகளால் போட்டியாளர்களை திகைக்கவைப்பீர்கள். வி.ஐ.பி-கள் வாடிக்கையாளர்கள் ஆவர். பெரிய நிறுவனங்களுடனான ஒப்பந்தங்களால், உங்கள் நிறுவனத்தின் புகழ் கூடும். வியாபார சங்கத்தில் முக்கிய பொறுப்பில் அமர்வீர்கள். பங்குத்தாரர்களால் இருந்த பிரச்சினைகள் ஓயும். புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். கம்யூனிகேஷன், புத்தகம், பங்கு, கட்டுமானப் பொருட்களால் லாபம் அடைவீர்கள்.

உத்தியோகத்தில் உங்களுக்கு எதிராக செயற்பட்ட அதிகாரி வேறு இடத்துக்கு மாற்றப்படுவார். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். சம்பள உயர்வு, சலுகைகள் கிடைக்கும். வெளிநாட்டு நிறுவனங்களில் நல்ல வாய்ப்புகள் தேடி வரும்.

கன்னிப்பெண்களுக்கு தடைப்பட்ட திருமணம் கூடிவரும். மாணவர்களுக்கு உயர்கல்வியில் வெற்றி நிச்சயம். கலைத் துறையினரே! அலட்சியப்படுத்திய நிறுவனம் உங்களை அழைத்துப் பேசும். கிசுகிசுத் தொல்லைகள் நீங்கும். அரசு கௌரவிக்கும். அரசியல்வாதிகள் தலைமைக்கு நெருக்கம் ஆவார்கள்.

மொத்தத்தில் இந்த குருப்பெயர்ச்சி வெற்றிகளையும் வசதி-வாய்ப்புகளையும் பெற்றுத் தருவதாக அமையும்.

பரிகாரம்: கட்டடத் தொழிலாளிக்கு உதவுங்கள். (தொடரும்)

# துறைமுக களஞ்சியசாலை தீ கண்டறியப்பட்டது காரணம்



(கொழும்பு)

கொழும்பு துறைமுக களஞ்சியசாலையில் தீ பரவியமைக்கு களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த ஒருவகையான இரசாயனப் பொருளே காரணம் என முதற்கட்ட விசாரணைகள் மூலம் அறியக் கிடைத்துள்ளதாக துறைமுக மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

ஹில்டன் ஹோட்டலில் நேற்று முன்தினம் துறைமுக அதிகார சபையினால் ஏற்பாடுசெய்யப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு துறைமுகத்தின் களஞ்சியசாலையில் தீ பரவியமைக்கான காரணங்களை பலரும் பலவிதமாக கூறுகின்றனர். அதற்கு முக்கிய காரணமாக குறித்த களஞ்சியசாலையில் தடைவிதிக்கப்பட்ட இரசாயனப் பொருள் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தமையே மேற்படி தீ விபத்து ஏற்படுவதற்கான காரணம் என்பதை முதற்கட்ட விசாரணைகள் மூலம் எமக்கு அறியக்கிடைத்துள்ளது.

தீ ஏற்பட்டமை குறித்து பல்வேறு கோணங்களில் விசேட பொலிஸ் குழு மற்றும் இரசாயனப் பகுப்பாய்வுக் குழு போன்றவற்றால் நடத்தப்பட்ட விசாரணையின் பின் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இத்தகவல்கள் வெளியாகின.

குறித்த களஞ்சியசாலையில் 461 நிறுவனங்களுடைய பல்வேறு வகையான பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. இதனால் 556 மில்லியன் ரூபா பொருட்களுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதுடன் களஞ்சியசாலை தீக்கிரையானதால் 40 மில்லியன் ரூபா துறைமுக அதிகார சபைக்கு நஷ்டமேற்பட்டுள்ளது.

இதேவேளை, களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 461 நிறுவனங்களின் பொருட்களில் 131 நிறுவனங்களுடைய பொருட்களுக்கு காப்புறுதி செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

## பரமர் சங்கமம்



"பூனைக் கண்ணை மூடிக்கொண்டால் பூலோகம் இருண்டு போகுமா" என்பது பழைய சினிமாப்பாடலொன்று. பூனை எதனையும் தானுட்கொள்கையில் கண்களை மூடிக்கொள்வதைப் பார்க்கலாம்.

அதிலும் திருட்டுத் தனமாகப் பால் குடிக்கையில் கண்களை மூடிக் கொண்டுதான் குடிக்குமாம். அப்படியெண்டால் ஒருவரும் அதனைக் காணவில்லை எண்ட நினைப்பாம்.

வீட்டுக்காரர் கண்டு விட்டால் கிடைக்கும் தண்டனை வாழ்நாளில் மறக்க முடியாததாகவே அமையும். இதுபோலதான் எமது யாழ்ப்பாணத்தில சில காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

அத்தனையையும் யாழ்ப்பாணம் விழிப்பாகப் பாத்துக் கொண்டிருக்கிறது. என்பதை எவரும் உணரவில்லை. குறிப்பாகக் கலாசாரச் சீரழிவு சமீபகாலத்தில் யாழ்ப்பாணத்தில் அதிகரித்துக் கொண்டிருப்பதை சுட்டிக் காட்டலாம்.

அதிலும் 2009 ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு தென்பகுதி மக்கள் வருகை அதிகரித்ததைத் தொடர்ந்து இங்கே விடுதிகள் குச்சொழுங்கைகளிலும் நிறுவப்பட்டன.

குடியிருப்பு வீடுகளும் விடுதிகளாக மாற்றப்பட்டு காசு, பணத்தைப் பார்க்கக்கிடைத்ததும் எல்லாமே தலை கீழாக மாறத் தொடங்கிவிட்டது.

தங்குநர் விடுதிகள் மெது மெதுவாக விபசார விடுதிகளாக உருப்பெறத் தொடங்கியது. இதனைப் பணம் பண்ணும் ஒருசிலர் நல்ல வருமானமுள்ள தொழிலாகச் செய்யத் தொடங்கியும் உள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நகை வியாபாரி ஒருவர் சமீபத்தில் விடுதி ஒன்றை நடத்திய குற்றச்சாட்டில் மாட்டுப் பட்டார். என்ன ஆச்சரியம் காவல்காக்கும் பகுதிக்கு இலட்சக் கணக்கில் பணம் கைமாற்றப்பட விடுவிக்கப்பட்டார்.

முன்னாள் அரச அதிபராக இருந்த இமெல்டா சுகுமார் இவ்விடயத்தில் அதீதகவனம் செலுத்திவந்தார். அதேபோல யாழ்.உதவி அரச அதிபர் சுகுணரதியும் யாழ்ப்பாணப் பெண்களின் மானத்தைக் காக்க முன்வந்துள்ளார்.

பெண்கள் அதிகார பீடத்தில் இருக்கையில் தான் அதனது வலி எத்தகையதென்பதை அவர்களால் உணர்ந்து நடவடிக்கை எடுக்கவும் முடிகிறது. இல்லாதவர்களால் மூச்சுக்கூட விடமுடியாத நிலைதான்.

அதிகார பீடத்தில் இருக்கும் இவர்களையே இவ்விடயத்தில் தலையிடுவதற்கு முகம் சுழிக்கும் சமுதாயம் இருக்கும் வரை இந்தச்சாபக் கேடு எம்மை விட்டு நீங்கப் போவதில்லை.

தமிழ்ச் சமுதாயம் சம்பாதித்து வைத்தவை எல்லாம் தன்மான உணர்வும் கல்வி, பொருளாதாரம் சார்ந்த மேம்பாடுகளுந்தான் என்றால் மிகைப்படுத்தலல்ல.

மட்டக்களப்பு தமிழகமும், விபசார கலாசார சீரழிவில் உட்பட்டுள்ளதாக ஊடகத்தகவல்களில் இருந்து அறிய முடிகிறது. வவுனியாவிலிருந்து அத்தகைய தகவல்கள் இதுவரை கிடைக்கவில்லை.

யாழ்ப்பாண கந்தபுராணக் கலாசாரத்தைத்தான் காப்பாற்றாவிட்டாலும், கற்பு நிலை தளம்பலை நமது எதிர்காலச் சமுதாயமே கட்டிக் காக்க வேண்டும். பூனையைப் போல் கண்ணை மூடிக்கொண்டால் பூலோகம் இருண்டிடுமெண்டு நினைக்கக் கூடாது என்ன நான் சொல்லுறே...

## தம்பான் டச்சு வீதி புனரமைப்பு

(தம்பான்)

வரணி வடக்கு தம்பான் வாழைத்தோட்டத்தருகில் உள்ள பழம்பெரும் ஒழுங்கையாக இருந்த டச்சு வீதி தற்போது புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் வீதி புனரமைப்பு நடவடிக்கைக்கு வடவரணி தம்பான் விநாயகர் சனசமூக நிலையம் மேற்க்கொண்ட முயற்ச்சியின் பயனாக பிரதேச சபையினரால் ஒரு இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அந்நிதி மூலமே தற்போது வேலைகள் நடைபெற்று வருவதாக சம்பந்தப்பட்ட சனசமூகநிலைய உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார். (150)

## தகவல் தொழில்நுட்ப கல்விச்செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் 10 இற்கும் அதிகமான கணனிகளை உடைய பாடசாலைகளின் தகவல் தொழில்நுட்பபீடத்தினை விருத்தி செய்வது தொடர்பான செயலமர்வு ஒன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் 4.30 மணி வரை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ் செயலமர்வில் 10 கணனிக்கு மேல் உள்ள யாழ். வலய பாடசாலைகளில் இருந்து தகவல் தொழில்நுட்ப பாடத்திற்கு பொறுப்பாக உள்ள ஆசிரியரை அனுப்பிவைக்கு மாறு யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (42)

## வரணியில் சிகிச்சை

(வரணி)

வரணி பிரதேச வைத்தியசாலையில் ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மாதத்தில கடைசித்திங்கட்கிழமைகளில் தொற்றாத நோய்களுக்கான சிகிச்சை வழங்கப்பட்டுவருவதாகவும் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு சனிக்கிழமைகளில் பூச்சி மருந்து வழங்கப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவசர நோயாளர் தேவைகளுக்கு அம்புலன்ஸ் வண்டிக்கு வைத்தியசாலையுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வைத்தியசாலைக்கு இதுவரை அம்புலன்ஸ் வண்டி இல்லாதால் நோயாளர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு பலதரப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டநிலையில் அண்மையில் அம்புலன்ஸ் வண்டி வழங்கப்பட்டது. இவ்வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி இல்லாதால் நோயாளர்கள் சிரமப்படுவதாக தினமுரசு முன்னர் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (150)

# இந்துநாகரிகம் கற்பிக்கும் ஆசிரியருக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் க.பொ.த. உயர்தர வகுப்பில் இந்துநாகரிக பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக் கருத்தரங்கு எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் 4.30 மணி வரை நடைபெற உள்ளது.

இக் கருத்தரங்கில் க.பொ.த உயர்தர வகுப்புகளில் இந்து நாகரிகம் கற்பிக்கும் ஆசிரியர்களில் சிரேஷ்ட ஆசிரியர்களினை இக்கருத்தரங்கில் பங்குபற்ற அனுமதித்து அவ் ஆசிரியர்களினை இக் கருத்தரங்கில் பங்குபற்ற அறிவுறுத்துமாறு வட மாகாண கல்வித்திணைக்கள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (42)

## முரசின் இன்றைய பலன்

(05.06.2013 – புதன்கிழமை)

விஜய வருஷம் வைகாசி மாதம் 15 ஆம் திகதி.
நட்சத்திரம் அச்சுவினி பிற்பகல் 02.19 வரை. திதி துவாதி.
பிற்பகல் 05.14 வரை. இராகுகாலம் 11.52 – 01.22 வரை.
சுபநேரம் 04.22 – 05.52 வரை. அமிர்த சித்தம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**



உங்களது வெற்றிக்கு உங்கள் நலம் விரும்புவோரின் ஆலோசனை உதவும். தொழில், இருந்த சிரமம் விலகும். சராசரி பணவரவு. புதிய செலவு வரும். உத்தியோகத்தில் முன்னேறும் அனுகூலம். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும்.

**ரிஷபம்**



மனதில் ஒருமுகத் தன்மையுடன் வேலைகளை முடிப்பீர்கள். நண்பர், உறவினர்களிடம் அன்பு, பாசமாக நடந்துகொள்வீர்கள். தொழில் வளர்ச்சியுறும். பணவரவு திருப்தி. உண்டு மகிழ்வீர்கள். நெடுநாளாய் தீராதிருந்த பிரச்சினை ஒன்று தீரும்.

**மிதுனம்**



நற்செயல்களில் ஈடுபாடு காட்டுவீர்கள். கண்ணியம் உங்களை உயர்த்தும். திட்டமிட்ட உழைப்பால் தொழில் வளர்ச்சி. சராசரி பணவரவு. உறவினர் இல்ல சுபநிகழ்ச்சிக்குத் திட்டம். நன்மையான திருப்பங்கள் வரும். பிள்ளைகளால் பெருமை.

**கடகம்**



தர்மசங்கடமான சூழல்கள். தடங்கலை வெல்ல பொறுமை அவசியம். அன்றாடப் பணியில் மாற்றம் உண்டாகும். தொழில், மந்தகதியில். வரவேண்டிய பணம் தாமதமாகும். நண்பருடன் பழைய நினைவு பகிர்வு. சுபகாரியச் செலவு இருக்கும்.

**சிம்மம்**



எண்ணத்திலும் செயலிலும் உற்சாகம், செயல்களில் புதுமை பரிணமிக்கும். தொழில், கடும் உழைப்பை செலுத்துவீர்கள். எதிர்பார்த்ததை விட கூடுதல் இலாபம். உடன்பிறந்தவர்களுக்கு உங்கள் உதவி தேவைப்படும். உத்தியோகத்தருக்கு சலுகை.

**கன்னி**



மனதிற்கு இதமான செய்தி வரும். எதிர்பாராத அதிர்ஷ்டமும், புதிய வாய்ப்புகளும். தொழில் செழித்து, வரவு உயரும். சமூகத்தில் கூடுதல் கௌரவம். எதிர்பாராத சந்திப்பு ஒன்று உங்களுக்கு நன்மையாக அமையும். விருந்து விசேஷம்.

**துலாம்**



கஷ்டநிலையை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், கடின உழைப்புத் தேவை. வரவு குறைவு. குடும்பத்திற்கான பெரிய செலவொன்று வரும். போக்குவரத்தில் கவனம். இறைநாட்டம் அதிகமாகும். தாயின் அன்பும் ஆசியும் ஆறுதல் தரும்.

**விருச்சிகம்**



புதிதாக உருவாகிற அவசரப்பணி, கஷ்டத்தைத் தரும். நண்பர் உதவுவார். தொழில், புதுமுயற்சிக்கு வெற்றி. அளவான பணவரவு. வெளிவட்டாரத் தொடர்புகள் விரி வடையும். குடும்பத்தில் சிறு சச்சரவு. விட்டுக் கொடுத்து தீர்க்கலாம்.

**தனுசு**



எதிர்ப்புகள் தாண்டுவீர்கள். மறுக்கப்பட்ட உரிமை கிடைக்கும். முயற்சிகள் வெற்றியடைவதால் எதிர்கால நம்பிக்கை உண்டாகும். தொழில் செழிப்பாகும். அதிக பணவரவு. வீட்டுப்பொருள் வாங்குவீர்கள். அரச உதவியும் கிடைக்கும்.

**மகரம்**



எதிர்மனப்பாங்குள்ளவரிடம் விலகுவது நல்லது. தொழில், அதிக வேலையும் அலைச்சலும். ஆனாலும் எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். துன்பமான செய்தி ஒன்று வரும். உறவினர் ஆதரவு நம்பிக்கையூட்டும். வெளியூர்ப் பயணம் நேரும்.

**கும்பம்**



உங்கள் திறமையை நம்பி, எதிர்காலத்திற்கான விவேகமான முடிவை எடுப்பீர்கள். எதிரிகள் விலகுவர். தொழில், செழிக்க கடுமையாக வேலை செய்வீர்கள். தாராள பணவரவு. குடும்ப விருப்பம் நிறைவேற்றுவீர்கள். ஆரோக்கிய பலம்.

**மீனம்**



அன்பு, கருணையை பிரதானப்படுத்துவீர்கள். பிறரிடம் பெருமதிப்புப் பெறுவீர்கள். தொழில், வியத்தகு முன்னேற்றம். உபரி வரவு மகிழ்ச்சிப்படுத்தும். தாயின் தேவை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும்.

17. வெற்றிடத்திற்கு மிகப் பொருத்தமான விடையை எழுதுக.
மழைகாலத்தில் வனங்கள் தண்மை மிக்கனவாக இருந்தால் வரட்சிக் காலத்தில் வனங்கள் ....................
.................................................. மிக்கனவாக இருக்கும்

**பொருத்தமான சொல்லை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

18) நாங்கள் ................................................ சென்றோம்.
(சரணலயம் ∴ சரணாளயம் ∴ சரணாலயம் ∴ சரணாழயம்)

19) மக்கள் அக்கிராமத்தை ...................................... கிராமம் என்று அழைத்தனர்
(பூச்சோலைக் ∴ பூஞ்சோலைக் ∴ பூஞ்சேலைக் ∴ பூஞ்சோளைக்)

**பின்வரும் தொடர்களால் உணர்த்தப்படும் கருத்தினை எழுதுக.**

20. கைகொடுத்தல் - ..............................
21. கிணற்றுத் தவளைபோல - ..............................

**பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களில் ) எழுதுக.**

22. புத்தகம் - ..............................
23. பேனை - ..............................
24. ஐந்து - ..............................
25. பச்சை - ..............................

**பின்வரும் தொடர்களின் கருத்தினை தமிழில் எழுதுக.**

26. Silence Please - ..............................
27. Thank you - ..............................
28. Come in - ..............................
29. What is this?- ..............................

**பின்வரும் தமிழ்ச் சொற்களின் கருத்தினை சிங்களத்தில் எழுதுக.**

30. அம்மா - ..............................
31. கதிரை - ..............................
32. மாம்பழம் - ..............................
33. அதிபர் - ..............................

34. பின்வரும் அரசர்கள் கட்டுவித்த குளங்கள் முறையாக அமையும் விடையின் கீழ்க் கோடிடுக.

A - தாது சேனன் C - தேவநம்பிய தீசன்
B. - மகாசேனன் D - பண்டுகாபயன்

1. A - அபயவாவி B - மின்னேரியா C - திஸ்ஸவாவி D - கலாவாவி
2. A - மின்னேரியா B. - கலாவாவி C - திஸ்ஸவாவி D - அபயவாவி
3. A - கலாவாவி B. - மின்னேரியா C - திஸ்ஸவாவி D - அபயவாவி
4. A - கலாவாவி B. - திஸ்ஸவாவி C. - அபயவாவி D - மின்னேரியா

35. இந்தியாவிலுள்ள அஜந்தா ஓவியங்களுக்கு ஒப்பான, கலைத்துவ படைப்புக்கள் காணப்படும் இடம் எது?
1.சிகிரியா 2. கம்பளை
3. தலதாமாளிகை 4. எம்பக்க தேவாலயம்

36. வொலிபோல் விளையாட்டுக்கான ஒரு குழுவிலுள்ள விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை யாது?
1. 6 2. 7 3. 10 4. 12



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I
1.30 மணி

# கல்வி முரசு



கடந்த வெள்ளிக்கிழமை வெளியான வினாத்தாளின் தொடர்ச்சி....


**கீழே தரப்பட்டுள்ள கூட்டுக்குள் ஒரு குடும்பத்தின் உறவுமுறை குறித்துக் காட்டப்பட்டுள்ளது. உறவுமுறைகளைக் கவனமாக அவதானித்து 26, 27 வினாக்களுக்குச் சரியான விடையினைத் தெரிவு செய்க.**

A யின் தாய் B ஆவார் B யினது மகள் C ஆவார்
C யின் கணவர் D ஆவார் E, F என்போர் D யின் பிள்ளைகளாவர்

01) இக்குடும்பத்தின் மூத்த உறுப்பினரைத் தெரிவு செய்து கோடிடுக
1) C 2) B 3) A 4) D

02) E என்பவர் பெண் பிள்ளையாயின் A,E என்பவர்களுக்கான உறவு முறை யாது?
1) மாமா - மருமகள் 2) பெரியம்மா - மகள்
3) பெரியப்பா - மகள் 4) தாத்தா - பேத்தி

**கீழே முதலில் தரப்பட்டுள்ள முழு உருவினை ஆக்குவதற்கு ஆறு துண்டுகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மேலதிகமானது. தேவையற்ற பகுதியின் ஆங்கில எழுத்தினைத் தெரிவு செய்து கோடிடுக.**

03) 


**எதிரே உள்ள கோலத்தை அவதானித்து பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

04)

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | ⇨ | 9 | ☆ | 81 |
| 5 | ☆ | 25 | ⇨ | 30 |
| 3 | ☆ | 9 | ☆ | B |
| 8 | ☆ | A | ⇨ | 69 |

1) B இன் பெறுமதி யாது?
1) 15 2) 21 3) 81 4) 85


2) A இன் பெறுமதி யாது?
1) 13 2) 14 3) 24 4) 64

05) பானுவிடம் மூன்று வகையான நாணயக்குற்றிகள் 12 இருந்தன. அந்நாணயக் குற்றிகளின் முழுப் பெறுமதி ரூபா 30 ஆகும்.
மேற்கூறிய கருத்தினைத் திருப்திப்படுத்தும் கூற்று


1) ரூபா 5 நாணயம் 4, ரூபா 2 நாணயம் 4, ரூபா 1 நாணயம் 2
2) ரூபா 2 நாணயம் 6, ரூபா 5 நாணயம் 3, ரூபா 1 நாணயம் 3
3) ரூபா 1 நாணயம் 6, ரூபா 5 நாணயம் 3, ரூபா 2 நாணயம் 3

06) முகம் பார்க்கும் கண்ணாடியின் முன்னால் நின்று கொண்ட ஒருவர் தனது உருவத்தைப் பார்த்துக்கூறிய கூற்றுக்களிடையே மிகச் சரியான கூற்று யாதாக இருக்கும்?
1) இக்கண்ணாடியில் தெரிபவரின் தந்தை எனது தந்தை ஆவார்.
2) இக்கண்ணாடியில் தெரிபவரின்தந்தை எனது சிறிய தந்தை ஆவார்
3) இக்கண்ணாடியில் தெரிபவரின் தந்தை எனது மகனின் மாமன் ஆவார்.

07) தரப்பட்டுள்ள அட்டைத்தாளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட பெட்டியினைத் தெரிவு செய்து கோடிடுக.




08) மாணவன் ஒருவன் காலையில் எழுந்து கால்முகம் கழுவி ஆயத்தமாகி பாடசாலை சென்று வகுப்பறையில் படிக்கும் விதத்தினைக் காட்டும் ஐந்து சந்தர்ப்பங்களின் படங்கள் இங்கு காட்டப்பட்டுள்ளன. இந்த ஐந்து சந்தர்ப்பங்களையும் ஒழுங்குமுறைப்படி காட்டும் விடை எது?




1) 2,5,3,4,1　　2) 2,4,1,3,5　　3) 4,3,5,1,2

கீழே சில வாக்கியங்களும், ஒவ்வொரு சொற்களுக்குமான குறியீடுகளும் அருகருகே தரப்பட்டுள்ளன. இருப்பினும், சொற்களுக்குரிய குறியீடுகள் ஒழுங்குமுறையில் வைக்கப்படவில்லை. ஒவ்வொரு சொற்களுக்குரிய குறியீடுகளை இனங்காண்பதன் மூலம் 34, 35 ஆம் வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து கோடிடுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இன்று | பாடசாலை | விடுமுறை | நாள் | ▲ | ❄ | ✿ | ❂ |
| நான் | நாளை | பாடசாலை | செல்வேன் | ▲ | ❄ | ✶ | ❀ |
| நான் | இன்று | கோவிலுக்கு | செல்கிறேன் | ✶ | ❀ | ● | ◍ |
| நாளை | வங்கி | விடுமுறை | நாள் | ✿ | ✢ | ✶ | ❂ |


09) இன்று பாடசாலை செல்கிறேன் என்பதற்குப் பொருத்தமான குறியீடுகள் எவை?

1) ❄ ▲ ●　　2) ▲ ❂ ✢　　3) ● ▲ ◍

10) ❀ ✿ ❂ ◍ ❄ எனும் குறியீடுகள் தரும் கருத்து யாது?


1) நான் வங்கி விடுமுறை நாள் செல்வேன்
2) நான் விடுமுறை நாள் கோவிலுக்குச் செல்வேன்
3) நாளை விடுமுறை நாள் நான் கோவிலுக்குச் செல்வேன்.

11) 1 ஆம் 2 ஆம் பொதிகளில் உள்ள பொருட்களின் பெறுமதிகளை அவதானித்து 3 ஆம் பொதியில் உள்ள பொருளின் பெறுமதியைக் கணித்து விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.




1 ஆம் பொதி　　2 ஆம் பொதி　　3 ஆம் பொதி

12)





என்றவாறு மின் குமிழ்கள் பொருத்தப்பட்ட கொடி ஒன்று அருகே தரப்பட்டுள்ளது. இதில் 50 ஆவது மின்குமிழின் நிறம் யாது?
..............................



தரப்பட்டுள்ள தகவல்களுக்கேற்ப பொருத்தமான விடையினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

13)




A,B,C,D,E,F ஆகிய ஆறு நகரங்களை இணைக்கும் பாதைகள் கீழே உருவப்படத்தின் மூலம் தரப்பட்டுள்ளன. அவற்றில் D எனும் நகரத்திலிருந்து E நகரத்தினூடாக F எனும் நகரம் வரைக்குமான தூரம் யாது?
..............................

குறித்த வலயம் ஒன்றில் ஒவ்வொரு பாடசாலைகளிலும் அதி கூடுதலான வருகை தந்த முதல் ஐந்து மாணவர்களும் தெரிவு செய்யப்படுவர். மாணவராயின் ஒரு புத்தகப் பையும் மாணவியாயின் ஒரு குடையும் வழங்கத் தீர்மானித்து தகவல் பெறப்பட்டது. இத்தகவலின்படி சேகரிக்கப்பட்ட விபரம் பின்வருமாறு.

36 பாடசாலைகளில் முதல் 5 மாணவர்களின் விபரம்
ஆண் - பெண் - ஆண் - ஆண்
45 பாடசாலைகளில் முதல் 5 மாணவர்களின் விபரம்
ஆண் - பெண் - ஆண் - பெண்
39 பாடசாலைகளில் முதல் 5 மாணவர்களின் விபரம்
பெண் - ஆண் - பெண் - ஆண் - பெண்

இத்தகவல்களைப் பயன்படுத்தி 39, 40 ஆம் வினாக்களுக்கு உரிய விடைகளை புள்ளிக் கோட்டில் எழுதுக

14) 120 பாடசாலைகளுக்கும் வழங்குவதற்கு வாங்க வேண்டிய புத்தகப் பைகளின் எண்ணிக்கை யாது?
..............................

15) குடை ஒன்று ரூபா 200.00 எனின் குடைகளை வாங்குவதற்குச் செலவாகும் தொகை யாது?
..............................

## பகுதி II

16) பின்வரும் விபரணத்தை வாசித்துக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக

மழை காலத்தில் வனங்கள் தண்மை மிக்கனவாகக் காட்சியளிக்கும். அக்காலத்தில் மரங்கள் எல்லாம் பச்சைக் கம்பளம் போர்த்ததுபோலக் காணப்படும். திறந்த வெளிகளில் புற்கள் உயர்ந்து வளர்ந்திருக்கும். குழிகளில் எல்லாம் நீர் நிறைந்திருக்கும். நதிகளிலோ, குளங்களிலோ மிருகங்கள் தண்ணீர் குடிக்கப் பதுங்கிச் செல்லும் நிலையை நாம் காணமுடியாது. நன்றாக விளைந்த கிழங்குகள், வேர்கள், இலைகள் என்பவற்றைச் சுவைத்து உண்டு பருத்து பன்றிகளோடு, மான்களும் அங்குமிங்கும் அலைந்து திரிகின்றன. களிறுக் கூட்டம் நதிக்கரைகளில் நின்று ஆரவாரம் செய்யாது காட்டினுள்ளே ஆடி அசைந்து செல்வதையும் காணலாம்.

01. வனங்கள் என்பதன் ஒத்த கருத்துச் சொல் ஒன்று தருக. ..............................
02. பருத்து என்பதன் எதிர்க்கருத்துச் சொல் ஒன்று தருக ..............................
03. களிறு என்பதற்குரிய பெண்பாற் சொல்லை எழுதுக ..............................
04. அஃறிணை பன்மை நிகழ்கால வினைச்சொல் ஒன்று எழுதுக ..............................
05. இங்கு இடம்பெற்றுள்ள இணைமொழி ஒன்று எழுதுக. ..............................
06. தன்மைப் பன்மைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக ..............................
07. ஆடி அசைந்து என்பதால் கருதப்படுவது யாது? ..............................
08. நதிகளிலோ குளங்களிலோ விலங்குகளுக்கு நீர் குடிக்க வேண்டிய தேவை ஏன் ஏற்படுவதில்லை?
..............................
09. ஆரவாரம் என்பதால் கருதப்படுவது யாது? ..............................

# பெண்கள் பள்ளிகளில் ஆசிரியைகள் மட்டுமே

# தமிழக அரசு அதிரடி உத்தரவு



பெண்கள் பள்ளிகளில் பாலியல் தொந்தரவுகளை தடுக்கும் வகையில் பெண்கள் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பெண் ஆசிரியைகளை நியமிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த கல்வி ஆண்டு முதலே இந்த உத்தரவு அமுலுக்கு வருகிறது.

இதுகுறித்து மே 28ஆம் திகதி தமிழக அரசாணை 145 இல் புதிதாக பணி நியமனம் மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதில் அரசு பெண்கள் பள்ளிகளில் பெண் ஆசிரியைகளையே நியமிக்க வேண்டும், தலைமை ஆசிரியைகளும் பெண்களாகவே இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.


இந்த உத்தரவையே பின்பற்றி அரசு ஆண்கள் பள்ளியில் ஆண் ஆசிரியர்களையே நியமிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில் இருபாலரும் சேர்ந்து படிக்கும் பள்ளிகளில் பெண் ஆசிரியைகளுக்கு முன்னுரிமை அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழக அரசின் இந்த உத்தரவுக்கு மதுரை மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி அமுதவல்லி வரவேற்பு தெரிவித்துள்ளார்.

மேலும் பதவி உயர்வு, புதிய ஆசிரியர்கள் நியமனம், இடமாற்றம் ஆகியவற்றில் இந்த உத்தரவு பின்பற்றப்படும் என்றார். அரசின் இந்த உத்தரவுக்கு ஆசிரியர்கள் தரப்பில் சிலர எதிர்ப்பும், வரவேற்பும் உள்ளது. பள்ளிகளில் பாலியல் புகார்களை தடுக்கும் வகையில் அரசின் இந்த உத்தரவு வரவேற்க கூடியது என்று ஆசிரியர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

# சேதுசமுத்திரத் திட்டத்தை வலியுறுத்தி

## மாநிலம் தழுவிய போராட்டம்




சேது சமுத்திரத்திட்டம் நிறைவேற்றப்படவேண்டுமென வலியுறுத்தி மாநிலம் தழுவிய அளவில் போராட்டம் நடைபெறும் என்று தி.மு.க தலைவர் மு.கருணாநிதி திங்களிரவு அறிவித்துள்ளார்.

கருணாநிதியின் 90ஆவது பிறந்தநாள் விழா நேற்று முன்தினம் நடந்தது. அவரது பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில் நடத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட கருணாநிதி, "சேதுசமுத்திரத் திட்டம் நலம் பயக்கும், தமிழகம் செழிக்கும், அதைப் பல்வேறு காரணங்களைச் சொல்லி கிடப்பில் போட்டிருக்கின்றனர்" என்று கூறினார். "அது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. அத்திட்டம் அமுல்படுத்தப்படும் என மத்திய மாநில அரசுகள் அறிவிக்காவிடில் தோழமைக் கட்சிகளையும் இணைத்துக்கொண்டு தி.மு.க பெரும் போராட்டத்தில் இறங்கும்" என்று அவர் எச்சரித்தார்.

கருணாநிதிக்கு அரசியல் தலைவர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர். தி.மு.க கட்சித் தொண்டர்களும் பல இடங்களிலும் சிறப்புக் கொண்டாட்டங்களை நடத்தியிருந்தனர்.

# தூக்கில் தொங்கிய நிலையில் பிரபல நடிகை ஜியாகான்




பிரபல சினிமா நடிகை ஜியா கான் நேற்றுமுன்தினம் தற்கொலை செய்து கொண்டது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஹிந்தியில் வெளியான கஜினி, அமிதாப் பச்சனின் நிசாபாத், அக்சய்குமாரின் ஹவுஸ்புல் உள்ளிட்ட ஹிந்தி திரைப்படங் களில் நடித்து புகழ்பெற்றவர் நடிகை ஜியாகான் (24).

மும்பை ஜுகூ பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப் பில் வசித்து வந்தார். நேற்று முன்தினம் இரவு 11.45 மணியளவில் தற் கொலை செய்து கொண்டதாக அவரது தாயார் பொலிஸிற்கு தெரிவித்தார். இதையடுத்து ஜுகூ காவல் நிலைய பொலிஸார், அவரது வீட்டிற்கு சென்று, படுக்கையறையில் மின்விசிறியில் தூக்கிட்டு தொங்கிய நிலையில் இருந்த நடிகை ஜியாகான் உடலைகைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

தற்கொலைக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர். கடைசியாக ஜியாகான் தொலை பேசியில் யாருடன் பேசினார், அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியவர்கள் யார் என்பதும் குறித்தும், அவரது வீட்டிற்கு கடைசியாக வந்து சென்றவர்கள் யார் என்பதும் குறித்தும் காவலாளியிடம் விசாரணை நடைபெற்றது.





# சிரியாவில் ஏவுகணைத் தாக்குதல்; 10 குழந்தைகள் உட்பட 26 பேர் பலி



சிரியாவின் இரண்டாவது பெரிய நகரமான அலெப்போவில் உள்ள கபார் ஹம்ரா கிராமத்தின் மீது நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் 10 குழந்தைகள், 6 பெண்கள் உட்பட 26 பேர் பரிதாபமாக பலியாகினர்.


அலெப்போ பகுதியில் முகாமிட்டுள்ள போராளிகளை குறி வைத்து ஏவப்பட்ட இந்த ஏவுகணை கிராமத்துக்குள் விழுந்து விட்டதாக அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன."அலெப்போ நகரில் இருந்து 45 கி.மீற்றர் தூரத்தில் உள்ள போராளிகளின் தலைமையிடமாக கருதப்படும் அஜாஸ் பகுதியை கைப்பற்றும் முயற்சியில் சிரிய படைகள் கடந்த ஒரு வாரமாக மூர்க்கத்தனமான தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இதனையடுத்து, கபார் ஹம்ரா கிராமத்தை கைப்பற்றி விட்டால் நுபுல் பகுதி வழியாக போராளிகளின் முகாம்களை அழித்து விடலாம் என்று கருதும் அரசுப் படைகள் அப்பாவி மக்களை கொன்று குவித்து வருகின்றனர். என இந்த தாக்குதலை நேரில் பார்த்த இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த போர் கண்காணிப்பாளர் ஒருவர் கூறினார்.



பெர்லின் அரண்மனைக்கு வந்த நெதர்லாந்து மன்னர் வில்லியம்-அலெக்சாண்டருக்கு(வலது) இராணுவ மரியாதை அளிக்கப்பட்டது.உடன் ஜெர்மனி அதிபர் ஜோசிம் காவ்க்.

## மூன்று நாள் கொண்டாட்டத்திற்காக 110 கோடி செலவிட்ட சவுதி இளவரசர்



எண்ணெய் வளம் மிக்க இஸ்லாமிய நாடுகளில் ஒன்றான சவுதி அரேபியாவின் மன்னராக நயீப் பின் அப்துல்-அஜீஸ் அல் சவுப் ஆட்சி புரிந்து வருகிறார்.

இவரது மகனான இளவரசர் ஃபஹ்த் அல்-சவுத், அமெரிக்காவில் உள்ள ஸ்டாண்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் பொறியியல் படித்து வருகிறார்.சமீபத்தில் இவருக்கு பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இதனையடுத்து, பிரான்ஸ் தலைநகர் பாரிசில் உள்ள டிஸ்னி லேண்டில் தனது கல்லூரி நண்பர்களுக்கு விருந்தளிக்க இளவரசர் முடிவு செய்தார்.

சுமார் 60 நண்பர்கள் புடைசூழ டிஸ்னி லேண்டிற்கு வந்த இளவரசருக்காக அங்குள்ள கலைஞர்கள் சிறப்பு காட்சிகளை நடத்தி மகிழ்வித்தனர்.இப்படி 3 நாட்களில் கேளிக்கைக்காக 12.5 கோடி பிரிட்டி' பவுண்டுகளை ஃபஹ்த் அல்-சவுத் செலவிட்டுள்ளார்.

## உலகச் செய்திகள்

## சீன சுரங்கத்தில் விபத்து 10 தொழிலாளர்கள் பலி



சீனாவின் "ஹனான் மாகாணத்தில் உள்ள ஹாவ்யாங் நகரில் சிமாசாங் நிலக்கரி சுரங்கத்தில் மீண்டும் பாரிய வெடி விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது.இந்த சுரங்கத்தின் அடிப்பகுதியில் 39 பேர் பணியாற்றிக் கொண்டிருந்தனர். அத்தருணம் பூமிக்கடியில் இருந்து கிளம்பிய விஷ வாயுவில் தீப்பொறி பட்டதால் பயங்கர வெடி விபத்து நேர்ந்தது.

இந்த விபத்தில் சிக்கியவர்களில் 10 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.படுகாயமடைந்த 15 பேர் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக கூறப்படுகிறது.இச்சம்பவம் தொடர்பாக சுரங்க மேலாளர் உட்பட 8 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.லஞ்சம், ஊழல், பாதுகாப்பு குறைபாடு, முறையற்ற நிர்வாகம் போன்றவற்றால் சீனாவின் நிலக்கரி சுரங்கங்களில் அடிக்கடி விபத்துகள் நேர்வது வாடிக்கையாகிவிட்டது. கடந்த மாதம் 25ஆம் திகதி ஹணடாங் மாகாணத்தில் நிலக்கரி சுரங்கத்தினுள் தண்ணீர் புகுந்ததால் 9 பேர் பலியானது குறிப்பிடத்தக்கதொன்று.

## நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவினை சிம்பாவே ஜனாதிபதி ஏற்பு

தேர்தலை நடாத்துமாறு நீதிமன்றம் வழங்கிய உத்தரவினை, ஸிம்பாவ்பே ஜனாதிபதி ரொபட் முகாபே ஏற்றுக் கொண்டுள்ளார். எதிர்வரும் ஜுலை மாதம் 31 ஆம் திகதி தேர்தலை நடத்த வேண்டுமென ஸிம்பாவ்பேயின் அரசியலமைப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த கட்டாய உத்தரவினை ஏற்றுக்கொள்வதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

முன்னாள் எதிர்கட்சித் தலைவர் மோர்கன் சுவாங்கிராயுடன் 2009 ஆம் ஆண்டு முதல் முகாபே கூட்டணியாக செயற்பட்டு வருகின்றார்.இதேவேளை, சுதந்திரமானதும் நியாயமுமான தேர்தலுக்கு தாம் தயார் என சுவாங்கிராய் இன் கட்சி கூறியுள்ளது. ஸிம்பாப்வேயின் மனித உரிமை நிலைமைகள் குறித்து சர்வதேச நாடுகளும் மனித உரிமை அமைப்புக்களும் கடும் விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



சுயாதீனமான முறையில் தேர்தல் நடாத்தி நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்ட வேணடுமென சர்வதேச சமூகம் வலியுறுத்தியுள்ளது,

## பிரான்ஸில் வேகமீறல் ராடர்கள் ஐரோப்பியர்களுக்கும் இனி தண்டம்



பிரான்ஸின் நெடுஞ்சாலைகளில் ராடர்களின் அறிவிப்புப் பலகையைக் கண்டு பிரெஞ்சு சாரதிகள் வாகனத்தின் வேகத்தைத் தணிப்பதைப் பார்த்து நகைத்தபடி ஐரோப்பாவின் மற்றைய நாட்டு வாகன சாரதிகள் வேகமாக முந்திச் செல்வது வழமை. ஏனெனில் அவர்களுக்கு ராடர் வேகமீறலைப் பதிவு செய்தாலும் அவர்கள் நாட்டிற்கு அந்தப் பதிவு அனுப்பப்படுவதில்லை. பெரும்பாலான வெளிநாட்டிலிருந்து வரும் வாகனம் செலுத்துவோர் தாம் பிரான்ஸில் எந்த விதி மீறலும் செய்யலாம் என்ற மனநிலையோடேயே வாகனங்களை செலுத்தி வருகின்றனர்.

ஆனால் இதற்கெல்லாம் முடிவு வந்து விட்டது. ஐரோப்பிய ஒன்றியத்தின் அமைச்சர்களின் முக்கியமாக பிரான்ஸ் அமைச்சர்களின் கோரிக்கையின் பேரில் ஐரோப்பிய ஒன்றியத்தின் போக்குவரத்து ஆணையாளர் சிம் கலாஸ் புதிய சட்ட வரைபை ஏற்படுத்தி உள்ளார். வீதி விதிமுறை எந்த ஒரு ஐரோப்பிய நாட்டினுள் மீறப்பட்டாலும் அது எந்தவொரு ஐரோப்பிய வாகனமாக இருந்தாலும் மீறப்பட்ட நாட்டுக் காவற்துறையினர் அவரைத் தொடர்ந்து குற்றப்பணத்தை வசூலிக்க முடியும்.

இச் சட்டமானது ஏற்கனவே சட்டநடைமுறையில் இருப்பினும் இது வரை பிரான்ஸில் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் பல நாடுகளிலும் நடை முறையில் இருந்திருக்கவில்லை. ஆனாலும் இந்தப் புதிய சட்டத்தின் மூலம் வீதி விதிமுறை மற்றும் வேகக் கட்டுப்பாட்டு மீறல் பதிவுகள் இலத்திரனியல் தரவுகளாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிடையே பரிமாறப்படும் என தெரியவருகிறது.

## மத்திய ஐரோப்பாவில் வெள்ளம்

ஆஸ்திரியா, ஜேர்மனி, மற்றும் செக் குடியரசு உள்ளிட்ட நாடுகளில் பல இடங்களில் வெள்ள நீர்மட்டம் அதிகரித்துவரும் நிலையில், அவசரநிலை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மண்சரிவுகளிலும் வெள்ளத்திலும் சிக்கி குறைந்தது 6 பேர் பலியாகியுள்ளனர். குறைந்தது 8 பேர் காணாமல்போயுள்ளனர். ஜேர்மனியில் ஈலன்பர்க் நகரில் 7 ஆயிரம் பேர்வரையில் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.செக் தலைநகர் பராகுவேயில் வெள்ளநீர் பெருக்கெடுக்கும் அபாயமுள்ளதால் அவதானமாக இருக்குமாறு மக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.பராகுவே மற்றும் அண்டிய பிரதேசங்களில் 3000 பேர் வரையில் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

பராகுவே வன-உயிர் காட்சிச் சாலையிலிருந்த உயிரினங்களும் பாதுகாப்பாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

மத்திய ஐரோப்பாவின் பல வீதிகள் மூடப்பட்டுள்ளன. .ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. மின்சாரம் முன்னெச்சரிக்கையாக துண்டிக்கப்பட்டுள்ளது.ஆஸ்திரியாவில் இரண்டு மாதங்களுக்குப் பெய்ய வேண்டிய மழை இரண்டே நாட்களில் கொட்டியுள்ளதாக வானிலை ஆராய்ச்சி நிலையம் கூறியுள்ளது.ஜேர்மனியில் பல நகரங்களில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

## கடாபியின் சொத்துக்கள் தென்னாபிரிக்க வங்கிகளில்



லிபியாவின் முன்னாள் தலைவர் முஹம்மர் கடாபியுடன் தொடர்புடைய ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான சொத்துக்கள் தென்னாபிரிக்காவில் உள்ளதாகத் தெரிவிககப்படுகின்றது.

கடாபியின் வைரங்கள், தங்கம் மற்றும் பணம் ஆகியவற்றை மீளப் பெற்றுக்கொள்ள உதவி புரியுமாறு லிபியா· தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றது.

தென்னாபிரிக்காவிலுள்ள நான்கு வங்கிகள் மற்றும் பாதுகாப்பு நிறுவனங்களில் இந்த சொத்துக்கள் உள்ளதாக லிபிய விசாரணையாளர்கள் கூறியுள்ளனர்.

கடாபியின் சுமார் 80 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான வெளிநாட்டுச் சொத்துக்கள் இருக்கலாம் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.2011ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இடம்பெற்ற லிபியப் புரட்சியின் போது சிறைபிடிக்கப்பட்ட முஹம்மர் கடாபி பின்னர் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வாக்காளர் இடாப்பு திருத்தம் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் மும்முரம்

## செயலகத்தில் விழிப்புணர்வுக் கூட்டம்



(யாழ்ப்பாணம்)

"வாக்காளர் தினத்தைக் கொண்டாடுவோம்" என்னும் தொனிப்பொருளிலான வாக்காளர் தின விசேட கூட்டமொன்று நேற்று யாழ்.செயலகத்தில் நடைபெற்றது.

வாக்காளர் தினமான யூன் முதலாம் திகதியில் யாழ்.மாவட்டத்தில் வாக்காளர்களாகத் தம்மைப் பதிவு செய்தவர்கள் புதிதாக வாக்காளர்களாகத் தம்மைப் பதிவு செய்து கொள்ளும் வகையில் யாழ். மாவட்ட உதவித்தேர்தல் அலுவலகத்தினால் இந்தத்தினம் பிரகடனப்படுத்தப்பட்டு கொண்டாடப்பட்டது. இதனை ஒட்டியே நேற்று இந்த விசேட கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

யாழ்.மேலதிக அரச அதிபர் ரூபினிவரதலிங்கம் தலைமையில் யாழ்.அரச அதிபர் அலுவலக மண்டபத்தில் நடைபெற்ற இந்த விசேட கூட்டத்தில் வடமாகாண மற்றும் யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ். அச்சுதன் மற்றும் வடமாகாணத்தின் முன்னாள் ஆளுநரின் செயலாளர் எஸ்.ரங்கராஜன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

மேலும் பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்களும் இதில் பங்குபற்றியிருந்தனர்.

இந்நிகழ்வில், பொதுமக்கள் தங்களை வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ளும் வகையில் அவர்களை எவ்வாறு விழிப்புணர்வூட்டுவது அவர்களுக்கு எவ்வாறு பி.,சி. படிவங்களை விநியோகிப்பது சம்பந்தமாகவும் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள் குறித்து கருத்தரங்கில் முன்வைக்கப்பட்டது.

அத்துடன், யாழ்.மாவட்டத்தில் உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் கடமையாற்றி இளைப்பாறிய தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்களும் இந்நிகழ்வில் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (பா)

# பசுமையான தேசத்தை ஒன்றிணைந்து படைப்போம்

## வேலணை பிரதேசசபை தவிசாளர் தெரிவிப்பு

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வேலணை பிரதேசசபை தவிசாளரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணை பிரதேச அமைப்பாளருமாகிய சின்னையா சிவராசா தெரிவிக்கையில், மே 5 ஆம் திகதியை உலக சுற்றாடல் தினமாக அனுஷ்டிப்பதற்கான பிரகடனத்தை ஐக்கிய நாடுகள் பொதுச்சபை 1972ஆம் ஆண்டு செய்த பின்பு வருடாந்தம் ஒவ்வொரு தொனிப்பொருளில் சுற்றாடல் தினம் அனுஷ்டிக்கப்பட்டு எம்மைச் சூழவுள்ள சுற்றாடலைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

மேற்படி தினத்துக்கான தொனிப்பொருள் 'உங்கள் கிரகத்துக்கு நீங்கள் தேவைப்படுகின்றீர்கள், காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராட ஐக்கியப்படுங்கள்" என்பதாகும்.

பூமியைப் பாதுகாப்பதில் ஒவ்வொரு தனி நபருக்கும் இருக்கின்ற பொறுப்பையும் காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கு புதிய தொரு உடன்படிக்கையைச் செய்து கொள்வதற்கு நாடுகள் இணங்கிக்கொள்ள வேண்டிய தன் அவசியத்தையும் இந்தத் தொனிப்பொருள் பிரதி பலித்து நிற்கிறது.

21ஆம் நூற்றாண்டில் மனித குலம் எதிர்நோக்கும் மிகப் பெரிய சவால்களில் ஒன்று காலநிலை மாற்றத்தின் விளைவாக நேருகின்ற அனர்த்தங்களாகும். உலகளாவிய இந்த நெருக்கடியை எதிர்கொள்வதற்கு மனிதகுலம் தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்வதற்கு இனிமேலும் தவறினால் விளைவுகளை நினைத்தும் பார்க்க் முடியாது என்றும் எனவே அனைவரும் இணைந்து பசுமையான தேசத்தை உருவாக்குவோம் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

# ஆசிரிய கலாசாலையில் முத்தமிழ் விழா

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முத்தமிழ் மன்றத்தால் முன்னெடுக்கப்படும் முத்தமிழ் விழா நாளையும், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆகிய இரு தினங்கள் இடம் பெறவுள்ளது.

முதல்நாள் நாடகவிழா நிகழ்வுகள் காலை 9.30 மணிக்கு கலாசாலையின் ரதிலஷ்மி மண்டபத்தில் பிரதி அதிபர் வீ. கருணலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. இவ்விழாவில் கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம், யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி த.கலாமணி, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அ.அமிர்தலிங்கம் ஆகியோர் இனிய விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

முத்தமிழ் மன்றக் காப்பாளர் அ.பௌநந்தி தொடக்கவுரையாற்றுவார். 'உதிர்ந்த உதயம் துளிர்விட', 'எதற்கும் ஒரு காலம் உண்டு', 'இனி யொரு விதி செய்வோம்', 'அன் பைத் தேடும் இதயங்கள்' ஆகிய நாடகங்கள் போட்டி அடிப்படையில் மேடையேற்றப் படவுள்ளன. விசேட நிகழ்வாக காத்தவராயன் சிந்துநடைக் கூத்து இடம்பெறவுள்ளது.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் காலை 9.00 மணிக்கு இயல் இசை விழாவாக இடம்பெறவுள்ளன. கலாசாலை அதிபர் வே. கா.கணபதிப்பிள்ளை தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சுச் செயலர் எஸ்.சத்தியசீலனும் அவரது துணைவியார் ராஜராஜேஸ்வரி சத்தியசீலனும் கலந்து கொள்வர். இனிய விருந்தினர்களாக யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி, வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராசா, வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் ம. பிரதீபன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் முத்தமிழ் மன்றத் தலைவர் க.சுதேஸ் வரவேற்புரையையும் மன்றத்தின் பிரதம காப்பாளர் ச.லலீசன் தொடக்கவுரையையும், விரிவுரையாளர் கழகத் தலைவர் வி.எஸ். குணசீலன் வாழ்த்துரையையும் வழங்கவுள்ளனர். சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்ற பொருளில் நாட்டிய நாடகம், இன்றைய கற்றல் கற்பித்தல் செயன்முறையில் பெரிதும் வளப்படுத்தப்படவேண்டியது மாணவர்களது கற்றலா? ஆசிரியர்களது கற்பித்தலா? என்ற தலைப்பில் அமைந்த பட்டி மண்டபம், பாஞ்சாலி சபதம், நாட்டுக் கூத்து உள்ளிட்ட பல கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

முத்தமிழ் விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோரை பதக்கங்கள் சூட்டிக் கௌரவித்தல் மற்றும் காவடி, கரகம், கும்மி, கோலாட்டம், சிலம்பாட்டம் முதலிய பண்பாட்டு ஆற்றுகைகளை வெளிப்படுத்தும் வரவேற்பு ஊர்வலம் என்பனவும் நடைபெறவுள்ளன. (10)

## நல்லிணக்க...

அவதானம் செலுத்தி வருவதாக நோர்வேயின் முன்னாள் சமாதான பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் மேலும் தெரிவித்துள்ளார். அண்மையில் தாம் அவுஸ்ரேலியா வுக்கு சென்றிருந்த போது புலம்பெயர்ந்த தமிழர்களை சந்தித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதன்போது கருத்துரைத்துள்ள அவர் இலங்கை

தொடர்பில் செய்திகளை அறிந்துகொள்ளும் தாம் அது தொடர்பானவர்களை சந்தித்து வருவதாகவும் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

தனித்தமிழீழம் என்ற கோரிக்கையை நிராகரித்துள்ள சொல்ஹெய்ம், இலங்கையின் ஜனநாயக வரம்புக்குள் கலந்துரையாடல்கள் மூலம் தீர்வு எட்டப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இதற்கிடையில் வடக்கு மாகாண சபைத்தேர்தலின்போது சர்வதேச கண்காணிப்பாளர்களின் பிரசன்னம் தேவை என்று தம்மிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்க் கட்சிகள் கோருவதாக சொல்ஹெய்ம் தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்போது இலங்கை பிரச்சினை தீர்வில் சமாதானத் தூதுவர் பதவி வகிக்காத போதிலும் தொடர்ந்தும் இலங்கை விவகாரத்தை கண்காணித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## தீர்வையற்ற...

கோரப்பட்டுள்ளது. சுதந்திர வர்த்தக உடன்பாட்டுக்கு அமைய வர்த்தக சமனின்மையைக் குறைக்க சீனா இணங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நடைமுறைகளை விரைவுபடுத்த கூட்டுக்குழுவொன்று உருவாக்கப்படும். 1952 இல் இறப்பர், அரிசி உடன்பாட்டில் இருந்து சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக உறவு வரலாற்று ரீதியானது. இரண்டு நாடுகளுக்கும் இடையில் பன்முனை ஒத்துழைப்பை விரிவாக்கிக் கொள்வதற்கு பலமான அடித்தளம் போடப்பட்டுள்ளது.

மொறட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாக வர்த்தகப் பாடசாலை ஒன்றை நிறுவவும் சீனா இணங்கியுள்ளது. விரைவில் சீன வர்த்தகக் குழுவொன்று கொழும்புக்கு வரவுள்ளது. அதற்காக .ஏற்பாடுகளை இலங்கை தூதரகமும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும் செய்து கொடுக்கவுள்ளன என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## கழுத்தை...

கொண்டிருந்தவேளை கயிறு சிறுமி கழுத்தில் ஊஞ்சல் கயிறு சுற்றுப் பட்டு இறுக்கியது. சிறுமியை உடனடியாக மீட்டெடுத்து முச்சக்கரவண்டியில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே குறித்த சிறுமி உயிரிழந்துள்ளார். சிறுமியின் சடலம் தற்போது பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (25, பா)

## பூநகரியில்...

வகையில் அண்மையில் பூநகரி உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடைபெற்ற வீட்டுத்திட்டம் தொடர்பான கலந்துரையாடலில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு வீட்டுத் திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (112)

# தொல்பொருள்களுக்கு அமெரிக்காவில் கிராக்கி

## கடத்த முயற்சித்தவர் கைது

(கொழும்பு)

பெறுமதி வாய்ந்த தொல் கலைப்பொருளை அமெரிக்காவுக்கு கடத்த முயன்ற குற்றச்சாட்டின் பேரில் 69 வயதான சுற்றுலா வழிகாட்டி ஒருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் இந்த தொல்கலைப் பொருளை இலங்கை தபால் கூரியர் சேவையில் அனுப்ப முயன்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகத்திற்கிடமாக காணப்பட்ட இந்தப் பொதியை தபால் திணைக்களம் உடைத்துப் பார்வையிட்டதைத் தொடர்ந்து சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தப் பொதியில் இலங்கையின் பெறுமதி வாய்ந்த தொல்கலைப்பொருள் காணப்பட்டுள்ளது.

சந்தேக நபரின் கொட்டஹேன தேயிலுள்ள வீட்டைச் சோதனையிட்டபோது பெருமளவிலான தொல்கலைப் பொருட்கள் காணப்பட்டதாக தொல்லியல் ஆய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# எம்.பி.யாக அஜித் சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

மேல் மாகாண சபை உறுப்பினர் அஜித் மன்னப்பெரும ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக சபாநாயகர் முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தனாவின் வெற்றிடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார். மேல் மாகாண சபை உறுப்பினரான அஜித் மன்னப்பெரும 2010ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் 44,612 வாக்குகளை பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாடாளுமன்றில்...

நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படாத பிரேரணை ஒன்றை ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜே. ஆர்.பி.சூரியப்பெரும கொண்டுவர முயற்சித்ததாலேயே குழப்பம் ஏற்பட்டுள்ளது.

அதனையடுத்து இருதரப்பு உறுப்பினர்களுடனும் சபாநாயகர் கலந்துரையாடி நாடாளுமன்றை இன்றுவரை ஒத்திவைத்தார்.

# பொன்னாலையில் இந்திய வீடமைப்பு நடவடிக்கைகள் துரிதம்



பொன்னாலைப் பகுதி மக்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்குவது தொடர்பிலான ஆலோசனைக் குழுக் கூட்டம் ஈ.பி.டி.பி.யின் வலிகாம பிரதேச இணைப்பாளரும், வலிமேற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) தலைமையில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் பொன்னாலை பாபுஜி ஆரம்பபள்ளி கல்வி அபிவிருத்தி நிலையத்தில் மேற்படி விடயம் தொடர்பிலான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, பொன்னாலை கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு 151 வீடுகள் வழங்கப்பட்டன. மேலும் அப்பகுதியில் வீடுகள் இல்லாத மக்களுக்கு மேலதிகமாக 34 வீடுகள் வழங்கப்படவுள்ளன.

இதில் பிரதேச செயலர் அ. சோதிநாதன், திட்டமிடல் பணிப்பாளர் ச.சிவகுமார், கிராம சேவையாளர் ரா.சீறிரஞ்சன், இலங்கை செஞ்சிலுவைச்சங்க உறுப்பினர் சரவணபவன், கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் ந.பொன்ராசு, கடற்தொழில் சங்கத்தலைவர் க.ஜெயம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அபிவிருத்திப்பணிகள் சீராக முன்னெடுப்பு

(வரணி)

யா/வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தியாசாலை அபிவிருத்திப் பணிகள் துரித கதியில் நடைபெற்று முடிவுறும் கட்டத்தில் உள்ள நிலையில் மலசல கூட திருத்த வேலைகள் மற்றும் கிணறு புனரமைப்பு சுற்றுமதில் கட்டும் பணிகள் போன்றன நடைபெற்று வருகின்றன.

பாடசாலை முதல்வர் வை. விஜயகுமாரன் மாணவர்களின் பெற்றோர்களை அழைத்து நடைபெற்றுவரும் வேலைகளின் திருப்தி பற்றி கலந்துரையாடி அபிவிருத்தி வேலைகளை தானே முன்னின்று நெறிப்படுத்தி வருவதுடன், பிழைசரிகளை உடனுக்குடன் சீர்செய்து வருகின்றார்.

இப்பாடசாலையின் புனரமைப்புக்கென அரசால் 5 இலட்சம் ரூபா அண்மையில் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(150)

# வீதி விபத்தில் படைவீரர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூரில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் படை வீரர் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிளும் முச்சக்கர வண்டியும் மோதிக் கொண்டதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த படைவீரர், ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவ்விபத்தில், 27 வயதான கெலும் என்ற படைவீரரே படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இந்து ஆலயங்களில் சூறை; முஸ்லிம் மக்கள் கட்சி கண்டனம்

இந்துக் கோயில்கள் தாக்கப்படுவதை முஸ்லிம்மக்கள் கட்சி வன்மையாக கண்டிப்பதுடன் நாட்டில் தொடர்ந்தும் மதஸ்தலங்களுக்கு பாதிப்பு ஏற்படுவது கவலை தருகிறது என முஸ்லிம் மக்கள் கட்சியின் பிரதித்தலைவர் மௌலவி அஸ்வர் பாக்கவி தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு அனைவரும் அனைத்து இடங்களுக்கும் செல்லலாம் என்ற சூழல் இருப்பதாக பெருமைப்படும் நிலையில் ஒரே இடத்தில் இருக்கும் மத ஸ்தலங்களுக்கு பாதுகாப்பில்லை என்பது நாட்டின் ஸ்திர தன்மையை கேள்விக்குட்படுத்தும் விடயமாகும்.

மக்கள் தமது அன்றாடப் பிரச்சினைகளுக்கு பரிகாரம் தேடவும், மன சாந்தி பெறவும் வணக்கஸ்தலங்கள் செல்கின்றனர்.

ஆனால் வணக்கஸ்தலங்களே தாக்கப்பட்டு கொள்ளையடிக்கப்படும் போது பொதுமக்கள் பாரிய மனச்சுமைகளுக்கு ஆளாகுகிறார்கள்.

இந்த நாட்டில் உள்ள அனைத்து மத ஸ்தலங்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை தொடராகக் கூறிவருகிறோம். மக்கள் தமது சமயங்களைப் பின்பற்றுவதோடு ஏனைய சமய ஸ்தலங்களுக்கும் பாதிப்பில்லாத போதுதான் நாட்டில் உண்மையான சமாதானம் நிலவுவதாக அர்த்தமாகும்.

இந்த வகையில் மட்டக்களப்பில் உள்ள இந்து ஆலயங்கள் உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டுள்ளமை பெரிதும் கவலைக்குரியதாகவும் நாட்டுக்கு அவமதிப்பை ஏற்படுத்தவதுமாகும்.

# கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கான நடமாடும் சேவை ஒரு நாள் நீடிப்பு

(வலிகாமம்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பவ்ரல் அமைப்பின் அனுசரணையுடன் 3 ஆம் திகதி திங்கட்கிழமை கோப்பாய் பிரதேச செயலகத்திலும், 04 ஆம் திகதி ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்திலும் தேசிய அடையாள அட்டைக்கான நடமாடும் சேவை நடைபெற்றது.

இந்நடமாடும் சேவையில் எதிர்பார்த்த அளவிலும் அதிகளவான மக்கள் கலந்து கொண்டனர்.

பவ்ரல் அமைப்பின் அனுசரணையுடன் நடாத்தப்படும் இந்நிகழ்வில் ஆட்பதிவுத்திணைக்களத்தின் உத்தியோகத்தர்களும் கலந்து கெண்டமை குறிப்பிடத்தக்கது.

இச்சந்தர்ப்பத்தை தவறவிட்ட பொதுமக்களின் நலனைக் கருத்திற்கொண்டு அரச உத்தியோகத்தர்களின் நலனை கருத்திற்கொண்டும் 08 ஆம் திகதி சனிக்கிழமை கோப்பாய் பிரதேச செயலகத்திலும் இந்நடமாடும் சேவையை மேலும் ஒரு நாள் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நடமாடும் சேவையில் அடையாள அட்டைக்கு புதிதாக விண்ணப்பித்தல், தொலைந்தமைக்கான விண்ணப்பங்கள் மற்றும் பழுதடைந்த அல்லது திருத்தத்திற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் பிறப்புச் சான்றிதழ், விவாகச் சான்றிதழ் உட்பட இதற்குத் தேவையான சகல ஆவணங்களையும் தயார்ப்படுத்தி வைக்குமாறு பிரதேச செயலர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் பொலிஸ் அறிக்கை, சத்தியக்கடதாசி, புகைப்படம், முத்திரை என்பனவும் தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் மற்றும் திருமணச் சான்றிதழ் என்பனவும் அன்றைய தினம் இலவசமாகப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# நிழல் பிரதி இயந்திரம் அன்பளிப்பு



யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினரின் கல்வி விருத்திச் செயற்பாடுளில் ஒன்றான 'பாடசாலைகளின் உடனடித்தேவைகளை இனங்கண்டு ஈடுசெய்தல் நிகழ்ச்சித்திட்டம் 2013' இற்கு அமைவாக நான்காவது செயற்பாடாக நிழற்பிரதி இயந்திரம் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இங்கிலாந்தில் உள்ள பழைய மாணவர் ஒருவரின் நிதிப்பங்களிபப்பினைப் பெற்று வழங்கப்பட்டுள்ள மேற்படி நிழற்பிரதி இயந்திரத்தினை அதிபர் திருமதி ஜே.கிறிஸ்ரபெல்விடம் பழைய மாணவர் சங்கத்தினர் அண்மையில் வைபவ ரீதியாக அன்பளிப்புச் செய்தனர்.

# பிரான்ஸ் தூதுவர் கிழக்கு விஜயம்

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் கிறிஸ்ரின் ரொபின்சொன் நேற்றுக் காலை கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்து அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் குறித்துக் கலந்துரையாடினார். இச் சந்திப்பில் உபவேந்தர் கலாநிதி கிட்னன் கோவிந்த ராஜா, பதிவாளர் கே.மகேசன், மற்றும் பீடாதிபதிகளும் கலந்து கொண்டனர்.

சந்திப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்த உபவேந்தர் கலாநிதி கிட்னன் கோவிந்தராஜா, கிழக்குப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்று வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடினோம். அத்துடன், கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து சமூகத்திற்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்வது குறித்தும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன என்றும் தெரிவித்தார்.

# தங்கம் கடத்திய மூன்றுபேர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக ஒரு தொகை தங்க ஆபரணங்களை சென்னைக்கு கொண்டு செல்ல முயற்சித்த மூன்று பெண்கள் கட்டுநாயக்க விமான நிலைய சுங்கப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நகைகளின் பெறுமதி 52 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் என சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி குறிப்பிட்டார்.

பூர்த்தி செய்யப்படாத தங்க ஆபரணங்கள் குறித்த பெண்களினால் மிகவும் சூட்சுமமான முறையில் அவர்களின் பாதணிகள் மற்றும் பயணப்பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்தபோது நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டு கைபற்றப்பட்டதாக சுங்கப் பிரிவு குறிப்பிட்டது.

ENGLISH
THE EASY WAY
Modern 5 Way Approach to English Language Learning
இலகுவழி ஆங்கில கற்கைநெறி
By: S.Muththulingam
சனி, ஞாயிறு காலை 9.00 - 11.00
செவ், வியா மாலை 3.00 - 5.00
இடம்: சிகரம் விரிவுரை மண்டபம்
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
☎ 021 222 0011
முதல் வகுப்பு இலவசம்
(C/2799)

உலகில் எந்த மூலையிலும் உங்களுக்காக ஒரு தொழில்
வழிகாட்டலும் உடனடி வாய்ப்புக்களும்
08-06-2013 சனிக்கிழமை காலை 9.00மணி
@ சிகரம் விரிவுரை மண்டபம்
பிரவேசம் இலவசம்
முற்பதிவுகளுக்கு 0773 616 798
சிகரம்
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(DAMROவுக்கு முன்னால்)
தொ.பே.: 021 222 00 11
மி.அ.:edusikaram@gmail.com web: www.sikaram.lk
(C/2817)

இப்பத்திரிகை இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூன் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.